
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 அக்டோபர் 01 - அக்டோபர் 07 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 26




# இந்தியா கூட்டணியை வலிமையுறச் செய்வோம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய நிர்வாகக் குழு முடிவு

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாக குழு கூட்டம் 2023 செப்டம்பர் 19 மற்றும் 20 தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்றது. கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், ஆந்திர மாநில செயற்குழு உறுப்பினருமா வனஜா கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.**

இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி (ஐ.என்.டி.ஐ.ஏ.) உருவாக்கம் உள்ளிட்ட அரசியல் வளர்ச்சிப் போக்குகள் குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அறிக்கை வைத்தார். ஐந்து மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில், கூட்டணி அமைப்பதில் கட்சியின் அணுகுமுறை மற்றும் பங்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் அவர் விளக்கினார்.

விவாத்துக்குப் பின்பு பின்வரும் முடிவுகளை தேசிய நிர்வாகக் குழு மேற்கொண்டது.

### 1. பெண்கள் இட ஒதுக்கீடு முன் வரைவு:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் பாலின சமத்துவத்திற்காக நிற்கிறது.

ரேணு சக்ரவர்த்தி, கீதா முகர்ஜி போன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும்தான், சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கான இடஒதுக்கீட்டிற்காகப் போராடியவர்கள். 1963ல் ரேணு சக்ரவர்த்தி நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்னையை எழுப்பினார். நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவராக இருந்த கீதா முகர்ஜி பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு பரிந்துரை வழங்கினார்.

இந்த பின்னணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடஒதுக்கீடு மசோதாவை வரவேற்கிறது ஆனால் 2024 நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலும், இந்தியா கூட்டணி உருவாக்கமும்தான் பாஜக அரசை உலுக்கியது. 2014 முதல் பாஜகவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தும், மசோதாவை தாக்கல் செய்ய 10 ஆண்டுகள் ஆனது.

தனக்குச் சாதகமான அரசியல் சூழலை உருவாக்க வேண்டும் என்பதற்காக, அதன் மையக் கருத்தோடு பாஜகவுக்கு முரண்பாடுகள் இருந்த போதிலும் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது அடுத்த மக்கள் தொகை கணக்கீடு நடந்து முடிந்து அதன் அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதிகள் மறு வரையறை செய்யப்பட்ட பின்னரே அமலுக்கு வரும். எப்படி 2029க்கு முன்னதாக இதனை அமல் நடத்தும் வாய்ப்பு இல்லை. பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கான இடஒதுக்கீடு கோரிக்கை விவாதிக்கப்படாமலும் பரிசீலிக்கப்படாமலும் இருப்பது வியப்பளிக்கிறது.

### 2. இந்தியா கூட்டணி பற்றி

இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டு இருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாக குழு வரவேற்கிறது. நமது குடியரசின் மதச்சார்பற்ற ஜனநாயகத் தன்மையையும் அதன் அரசியலமைப்பையும் பாதுகாப்பதில் இந்தியா கூட்டணி ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்று கட்சி நம்புகிறது. இந்த வலுவான அரசியல் உருவாக்கத்தின் மூலமாக ஒன்றிய மற்றும் பல மாநில அரசுகளின் இருந்து பாஜகவை அகற்ற இயலும். தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களை அணிதிரட்டி இந்தியா கூட்டணியை வலுப்படுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன்னாலான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்கும்.




வரவிருக்கும் மாநில மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான அரசியல் மற்றும் அமைப்பு ரீதியான ஆயத்தங்களை செய்வதற்கான ஒருங்கிணைப்பு, பரப்புரை, மின்னணு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகப் பிரச்சாரம் போன்ற நடைமுறை நோக்கங்களுக்காக பல்வேறு குழுக்களை அமைப்பதென மும்பை கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக முடிவு செய்ததை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கிறது.

மற்றபல அரசியல்கட்சிகளை உள்ளடக்கி விவாதிப்பதற்கும் முடிவு எடுப்பதற்கும் இடமளிக்கும் வகையில் ஒருங்கிணைப்புக் குழுவை விரிவுபடுத்தலாம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

பிஜேபி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளை தோற்கடிப்பதே முதன்மையான நோக்கம் என்பதை கருத்தில் கொண்டு, இந்தக் குழுக்கள் அனைத்தும் சமூகமாக இயல்பாக இயங்குவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது சிறப்பான பங்களிப்பை நல்கும்.

### 3. தேர்தல்கள் குறித்து:

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய மாநில சட்டசபை தேர்தல்களுக்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்க வாய்ப்புள்ளது.

தேசிய செயற்குழு, ஆலோசனைக்குப் பிறகு, சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள மாநிலங்களிலும், நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி போட்டியிட பொருத்தமான தொகுதிகளை கண்டறியுமாறு மாநில குழுக்களை கட்சி கேட்டுக் கொள்கிறது.

இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளோடு, கட்சியின் மாநில குழுக்கள் தொடர்பில் இருக்குமாறும், மாநில சட்டப்பேரவைகளுக்கான தொகுதி பங்கீடு குறித்து பேச்சு வார்த்தைகளை துவக்குமாறும் வழிகாட்டியது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## அ.தி.மு.க - பா.ஜ.க விவாகரத்து நாட்டுக்கு நல்லது

### தேசியசெயலாளர் கே.நாராயணா பேட்டி




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாககுழுக் கூட்டம் செப்.26,27,தேதிகளில் சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வந்திருந்த தேசிய செயலாளர் கே.நாராயணா பத்திரிக்கையாளர்களை சந்தித்தார்.

ஒன்றியத்திலும் மாநிலத்திலும் ஒரே கட்சி இருந்தால் அது இரட்டை இன்ஜின் ஆட்சி என்றும், அவ்வாறு அமைந்தால் நாட்டுக்கும் அந்த மாநிலத்திற்கும் நல்லது என்றும் பிஜேபி பரப்புரை செய்து வந்தது.

மணிப்பூரில் ஆட்சிக்கு வந்த பி.ஜே.பியே, அங்கு கலவரத்தை தூண்டியது. இராணுவத்தை அனுப்பியும் கட்டுப்படுத்த முடியவில்லை. நான்கு மாதகாலமாக கலவரம் நடந்து வருகிற மணிப்பூர் மாநிலத்தின் முதல்வர் இன்னும் பதவி விலகாமல் இருப்பது வெட்கக்கேடானது.

சனாதனம் என்றாலே அது இந்து மதம் என்று பா.ஜ.கவினர் சித்தரிப்பது தவறானது. கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறவேண்டும் என்று சனாதனம் கூறுவதை ஏற்றுக் கொள்ளமுடியுமா? இதனை எதிர்த்து இன்று அல்ல, சில தலைமுறைகளுக்கு முன்பு நமது முன்னோர்கள் போராடியிருக்கிறார்கள். அதன் வழியில் சனாதனத்தின் மோசமான அம்சங்களை எதிர்க்க வேண்டியது அவசியமாகிறது.

ஒன்றிய பி.ஜே.பி அரசு வாக்குறுதி அளித்த மக்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் குறித்தோ, அவர்கள் செய்த ஊழல்கள் குறித்தோ யாரும் பேசி விடக்கூடாது என்பதற்காகவே, தற்போது சனாதனம் குறித்த பிரச்சினை கையில் எடுத்திருக்கிறார்கள்.

பி.ஜே.பி கூட்டணியிலிருந்து அ.தி.மு.க விவகாரத்து வாங்கியது நாட்டுக்கும் மக்களுக்கும் மிக நல்லது. பி.ஜே.பி கூட்டணியிலிருந்த பல கட்சிகள் வெளியேறிவிட்டார்கள். இன்னும் கூட மேலும் சில கட்சிகளும் வெளியேறுவார்கள் என நம்புகிறோம். வருகின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில். இந்தியா கூட்டணி மாபெரும் வெற்றிபெறும்

தமிழ்நாட்டில் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணியின் செல்வாக்குக்கு முன்னால் அ.தி.மு.கவும் பி.ஜே.பியும் தோற்கடிக்கப்படும் என்பது உறுதி.

இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலசெயலாளர் இரா.முத்தரசன், மாநிலத்துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் விவசாய சங்க மாநிலச் செயலாளர்.பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் உடன் இருந்தனர்.

கட்சிக் கடிதம்

# கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு ஊர் தோறும் விழா எடுப்போம்!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**உலகக் கவிஞர் என தமிழ்நாடு அரசால் போற்றப்பட்டு, தஞ்சையில் மார்பளவு சிலை, அவரது பெயரால் அரைக் கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கி, அதனை வங்கியில் வைப்புத்தொகையாக (பிக்சட் டெபாசிட்) வைத்து, அதில் இருந்து கிடைக்கும் வட்டித் தொகையில் ஆண்டுதோறும் மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, போட்டிகள் நடத்தி பரிசு வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.**

சென்னை பல்கலைக்கழகத்தில் இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாண்புமிகு அமைச்சர் சாமிநாதன், வரும் அக்டோபர் திங்களில் பெரும் கருத்தரங்கு நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது வரவேற்புக்குரியது. புதுவை மாநில அரசு ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்தி வருகின்றது. இவை எல்லாம் யாருக்கு? ஓர் வள்ளல் பெருமானுக்கு.

யார் அந்த வாரி வழங்கும் வள்ளல்?

வறுமையின் கோரத்தால் தனது 41 ஆம் வயதில் நம்மை விட்டுப் பிரிந்த பொதுவுடமைப் போராளி மாகவிஞன் தமிழ் ஒளி. வள்ளல் என்கிறீர், பின் வறுமை என்கிறீர். இது என்ன கோலம்? ஆம், வறுமை நிறைந்தவன் தான், ஆனால் அவன் வாரி வழங்கிய வள்ளல்தான். எதனை வாரி வழங்கினான்? பொன்னையும் பொருளையுமா? இல்லை, இல்லை. அதனைக் காட்டிலும் வல்லமை பொருந்திய கவிதைகளை வாரி வழங்கினான்.

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகில் உள்ள ஆடூர் என்னும் சிற்றூரில் பொ.சின்னையா செங்கேணியம்மாள் தம்பதியருக்கு 1924 செப்டம்பர் 21ல் பிறந்து, புதுவையில் வளர்ந்து 1965 மார்ச் 29ல் மறைந்தார்.

மறையவில்லை.. இன்றும் என்றும் நம்முடன் வாழ்வார்; வாழ்ந்து கொண்டே இருப்பார்.

தனது 41 வயதுக்குள்ளாக,
190 கவிதைகள்
30 சிறுகதைகள்
20 ஓரங்க நாடகங்கள்
3 மேடை நாடகங்கள்
3 ஆய்வு நூல்கள்
2 குறுநாவல்கள்
என நமக்கு வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். அவர் நமக்கு அளித்த கொடை இவைதான். இக்கொடைகளின் மூலம் என்றென்றும் நம்முடன் வாழ்வார். வாழ்ந்து கொண்டே இருப்பார்.

மாகவி பாரதியை பின்பற்றி, புரட்சி கவிஞர் பாரதிதாசனை தன் குருவாக ஏற்று, வாழ்நாள் முழுமைக்கும் கவிஞனாக, எழுத்தாளனாக வாழ்ந்தவனுக்கு வறுமையின்றி வேறென்ன கிடைக்கும்?

தொழில் கவிஞனாக, எழுத்தாளனாக இருந்திருப்பாரேயானால், வசந்த காலத்தைப் பெற்று குபேரன் ஆகி இருக்கலாம்.

அவர் அப்படி வாழவில்லை. வாழ விரும்பவில்லை. மாறாக கம்யூனிஸ்டாக, லட்சிய புருஷனாக வாழ விரும்பினார். அதற்கு கிடைத்த அரிய பரிசு தான் வறுமை. அதனைக் கண்டு அவர் அஞ்சவில்லை. வறுமையிலும் கொடிய பசியிலும் பிறர் பசி போக்க எழுதிக் குவித்தார்.

பட்டினி வாழ்க்கை வாழ்ந்து நல்லதைச் செய்கிறார் என்பதற்காக காசநோய் அனுதாபப்படுமா என்ன?

நெருக்கடி மிகுந்த நேரத்தில் ஜனசக்தியில் எழுதினார். ஜனசக்தி தடைக்கு உள்ளான போது அதற்கு மாற்றாக முன்னணி இதழ் தொடங்கப்பட்டு, அதிலும் எழுதினார். அதுவும் தடை செய்யப்பட்டது. அதற்கு மாற்றாக போராளி இதழ் தொடங்கப்பட்டு அதிலும் எழுதினார். பேராசான் ஜீவா தொடங்கிய தாமரை இதழிலும் மனம் பரப்பினார். சுதேசமித்திரன் ஏட்டிலும் எழுதினார். திராவிட இயக்க இதழ்களிலும் எழுதினார்.

உலகம், அலாவுதீனும் அற்புத விளக்கும் ஆகிய திரைப்படங்களுக்கும் பாடல் எழுதினார்.

இவர் தீட்டிய சிற்பியின் காதல் என்னும் நாடகம், வணங்காமுடி என்று திரைப்படமாகியது.

தாய் தந்தையர் இட்ட பெயர் ராஜாங்கம்; தமிழ்ப் பற்றாளர், தமிழ் ஒளியாகத் திகழ்ந்தார். உழைப்பாளி மக்களின் ஒளி விளக்காக இன்றும் விளங்கிக் கொண்டுள்ளார்.

எனக்குத் தமிழ் கற்றுத் தந்த ஆசான்கள் இருவர். ஒருவர் பேராசன் ஜீவா; மற்றொருவர் தமிழ் ஒளி.

மாபெரும் எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதன், திரைப்படத் துறையில் கொடிகட்டிப் பறந்திட்ட ஏ.எல்.நாராயணன் போன்ற பெருமக்களின் பாராட்டுக்குரியவரானார்.

தொடக்கத்தில் திராவிட இயக்கத்தில் பங்கு பெற்று, பணியாற்றிய கவிஞர், பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் (1946) ஜீவா முன்னிலையில் உறுப்பினரானார்.



ரஷ்ய புரட்சியை வரவேற்றுப் பாடிய முதல் கவிஞன் என்ற பெருமை பாரதியை சாரும்.

மே தின விழாவை முதன்முதலில் கொண்டாடி மகிழ்ந்தவர் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் (1923)

உலகு போற்றும் மே தினத்தை வரவேற்றுப் பாடிய முதல் கவிஞன் தமிழ் ஒளி.

கோழிக்கு முன் எழுந்து
கொத்தடிமை போல் உழைத்து
பாடுபட்ட ஏழை முகம் பார்த்து
பதை பதைத்து
கண்ணீர் துடைக்க வந்த
காலமே நீ வருக
மே தினமே வருக (1949 மே 8)

என வரவேற்று மகிழ்ந்தார்.

உலகத் தொழிலாளர்களின் சுரண்டப்பட்ட மக்களின் கண்களைத் திறந்த, காலனி நாடுகளின் விடுதலைக்கு வித்திட்ட நவம்பர் புரட்சி குறித்துப் பாடிய பாடலில்..

மன்னர் முடிகள் உடையும் ஏழை மனிதர் முடிகள் உயரும் (1948)

என கம்பீரமாக குறிப்பிட்டார்.

1947 ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பஞ்சாலை தொழிலாளர்களுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டால் சிகிச்சை அளித்திட நிர்வாகத்தின் சார்பில் மருத்துவர் உறுதி செய்தால்தான் விடுப்பு கிடைக்கும்.

நாராயணன் என்ற தொழிலாளி நெஞ்சுவலி தாங்காமல் மில் மருத்துவரிடம் சென்று முறையிட்டார். அவரோ அதனை ஏற்க மறுத்தார். விளைவு, நாராயணன் விடுப்பு எடுக்க முடியாமல் பணிக்குச் சென்றார். மருத்துவர் அனுமதி அளிக்க மறுத்த காரணத்தால், பணிக்குச் சென்றவரை நோய் என்ன விட்டு விடுமா? அதுவும் நெஞ்சு வலி. மரணமுற்றார்.

பொங்கி எழுந்த தொழிலாளர்கள், மருத்துவரின் அலட்சியத்தால், சக தோழனைப் பறி கொடுத்தோம் எனப் போராடினர்.

தொழிலாளர்களின் போராட்டம் என்றால் நிர்வாகத்திற்கு ஆதரவாக காக்கிகள் திரண்டு வரும்; தடியடி நடத்தும்; கண்ணீர் புகைக்குண்டு வீசும்; பின்னர் தோட்டாக்கள் தீரும் வரை சுட்டுத்தள்ளும்.

அங்கேயும் சுட்டார்கள். துப்பாக்கிச் சூட்டிற்கு..

1. அமினி மஸ்தான்
2. அருணாச்சலம்
3. ஜெபஸ்தியான்

இந்து, முஸ்லிம், கிறிஸ்து என வேறுபாடு இன்றி மூவரும் பலியாயினர். பலர் படுகாயமுற்றனர். இச்செய்தி கேட்டு கொதித்தெழுகிறார் கவிஞர். அக்கோர படுகொலைகளைக் கண்டித்து கவிதை தீட்டினார்.

அமெரிக்க நாட்டினிலே நமக்கும் காதல்
ஆனந்தக் கதையொன்றைப் படித்த வண்ணம்
தமை மறந்து சிகரட்டின் புகைக் கூட்டத்தில்
தலைமறைய டாக்டருமே அமர்ந்திருந்தார்.
ஓய்ந்திருக்கும் நேரத்தில் வந்து விட்டாய்
உயிர் வாங்க எனச் சொல்லி குதித்தார் டாக்டர்
காதலைப் பொதுவிடத்தில் ஏற்றி வைத்தால்
கடும் கொலைகள் நடக்காமல் என்ன நேரும்!

மாமேதை லெனின் அரசு குறித்து கூறும் போது, ஆளும் வர்க்கத்தின் கருவி அரசு என்றார். அதனை கவிஞர் தனக்கே உரிய பாணியில் கவிதை தந்தார்.

மகராசர் முன்னோடும் முதல் பின்னாடி அரசாங்கம்
இகழ்வோரை கடிக்க வரும்
எழும்பிட்டால் வாலாட்டும், என்ன நீதி!
நீ யார் பக்கம்

சிலர் எனக்கு அரசியலே பிடிக்காது. நான் எந்தக்கட்சியிலும் இல்லை. கட்சி சார்பற்ற சங்கம்; கட்சி சார்பற்ற மன்றம் என்று கூறுவார். கவிஞர் கேட்கின்றார்..

ஊனமிலாத உயர் வலியுடையோன்
உன்னுடைய கடமையை உதறித்தள்ள
எண்ணிட வேண்டாம்
இப்பொழுதே நீ
எவர் பக்கம்? என்றியம்பிடுவாயே!

ஆளுநர்களின் அட்டகாசம் இன்று மட்டுமல்ல, அன்றும் உண்டு. புதுச்சேரி மாநிலம் பிரெஞ்சுக்காரர்கள் ஆளுகைக்கு உட்பட்டது. அங்கே போள்வேள் என்ற ஆளுநர் இருந்தார். அவரது அட்டகாசத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் அளவே இல்லை.

புதுச்சேரி மாநிலத்தின் பிதாமகனாக, புதுச்சேரியின் தந்தையாக, புதுச்சேரியின் காந்தியாக விளங்கிய தலைவர் தோழர் வ.சுப்பையா என்பது நாடறியும். அவரை மாநிலத்திலேயே வசிக்கக் கூடாது என்று தடை விதித்து நாடு கடத்திய புண்ணியவான் தான் போள்வேள் என்ற ஆளுநர். அவர் மட்டுமல்ல, அவரது குடும்பமே அதிகாரம் செலுத்தியது. அவரது மகன் அடித்திட்ட கொட்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

மாணவனாய் இருந்த தமிழ் ஒளி இவைகளைக் கண்டு ஆத்திரமுற்று, கவர்னர் அவரது குடும்பம் செய்து வந்த கொடுமைகளை தோலுரித்து துண்டுப் பிரசுரம் அச்சிட்டு, நகர் முழுவதும் விநியோகித்தார்.

ஆணவ அரசு பொறுத்துக் கொள்ளுமா? ஆணையிட்டது. கைது செய்யப்பட்டு இருவாரம் சிறையில் அடைக்கப்பட்டார். பின் மாணவர் என்கிற காரணத்தால் விடுவிக்கப்பட்டார்.

பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரை அவர்களால் போற்றப்பட்ட கவிஞர். மாணவப் பருவம் தொட்டு வாழ்ந்த காலம் முழுமைக்கும் வறுமையை, காச நோயை எதிர்த்துப் போராடியது மட்டுமல்ல முதலாளித்துவத்தை, சாதியை, தீண்டாமையை எதிர்த்துப் போராடிய மாவீரன்.

தமிழக கம்யூனிஸ்ட் வீரர்கள் என 400க்கும் மேற்பட்ட உத்தமர்கள் குறித்து நினைவில் வாழும் போற்றுதலுக்குரிய தோழர் பெ.சீனிவாசன் அவர்கள் வெளியிட்டுள்ள இரண்டு தொகுதிகள் கொண்ட நூலில், கவிஞர் தமிழ் ஒளியும் இடம்பெற்ற பெருமைக்குரியவர்.

நமது மதிப்புமிக்க தலைவர், தோழர் நல்லகண்ணு அவர்கள் கவிஞர் தமிழ் ஒளி குறித்து எழுதியுள்ள புத்தகம் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. நியூசெஞ்சுரி புத்தக விற்பனை நிலையங்களில் கிடைக்கும். வாங்கிப் படியுங்கள்.

மற்றும் கவிஞரின் அனைத்து நூல்களையும் படித்துப் பயன்பெறுங்கள்.

தோழர்களே! நூற்றாண்டு கண்ட கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டு செப்டம்பர் 21ல் தொடங்கிவிட்டது. 2024 செப்டம்பர் 21ல் நூற்றாண்டு நிறைவடையும். கவிஞனுக்கு ஊர் தோறும், நகர் தோறும், பட்டி தொட்டி எங்கும் விழா எடுங்கள். அது மாற்றத்திற்கான பாதை அமைத்துத் தரும்.

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



நா.பெரியசாமி

# காவிரி உரிமை நிலைக்குமா? குறுவை உயிர் பிழைக்குமா?






**தற்போதுள்ள கர்நாடக மாநிலத்தில் கூர்க் மாவட்டத்தின் தலைக் காவேரி என்னுமிடத்தில் உருவாகும் காவிரி சுமார் 850 கிலோமீட்டர் தூரம் பயணித்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்கரை பகுதிகளை அடைந்து வங்கக் கடலில் சங்கமிப்பதில் முடிகிறது.**

மேற்கு தொடர்ச்சி மலையில் பிரமசிரி மலைப் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து 1341 மீட்டர் உயரத்தில் (MSL) பிறக்கும் காவிரி ஆறு, படிப்படியாக சரிவான நிலப் பகுதியில் தவழ்ந்தும். சம வெளியில் ஓடியும் கடலில் கலந்து விடுகிறது.

இயற்கையாக அமைந்த காவிரி ஆற்றின் சிறப்பை பற்றி இலக்கியங்கள் பெருமை பட பேசுகின்றன.

**“வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலையத் தலைய கடற் காவிரி**
**புனல் பரந்து பொன் கொழிக்கும்**
**விளைவறா வியன் கழனி”**

என்கிறது பட்டினப்பாலை. இவையெல்லாம் தமிழில், தமிழ்மக்கள் படித்து மகிழ்ந்த காவிரி, இன்று கதறி அழும் ஓலங்களை கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஆற்றங்கரையில் நிலை பெற்று வாழத் தொடங்கிய மனித குலம், வாழ்க்கை தேவைகளுக்காக நடத்தும் போராட்டத்தில் சமூக வாழ்வு வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

முந்தைய மனிதர் தரும் உறுதியை பின்னர் வரும் தலைமுறை தொடர்ந்து உறுதி செய்து, நிறைவேற்றி வருவது இயற்கை நியதியாக பேணப்பட்டு வருகின்றது.

ஆனால், இயற்கை பேரிடர் காலங்களில் கட்டறுத்து வரும் காவிரி ஆற்றின் நீரோட்டத்தால் தமிழர் வாழ்வு பெருந் துயரத்தை சந்தித்து வந்தது. கண்ணீர் விட்டு கதறி அழுத குடிமக்களின் துயர் போக்க, கரிகால் சோழன். சீரிய முயற்சி எடுத்தான் . அதன் விளைவு கல்லணை து. அதன் தொழில்நுட்ப ஆற்றலை , வளர்ந்து நிற்கும் நிகழ்கால விஞ்ஞானமும் வியந்து, வியந்து பேசுகிறது

கடந்த ஜூன் 12 ஆம் தேதி வழக்கம் போல மேட்டூர் அணையில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அணையின் கதவுகளை திறந்து விட்டு, வெளியேறிய தண்ணீரை மலர் தூவி கடைமடை வரை தடையின்றி செல்ல வேண்டும் என வாழ்த்தி அனுப்பினார்.

திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகபட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், கடலூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ந்து வரவேற்றனர்

தண்ணீர் திறந்து விடும் போது மேட்டூர் அணையில் 43 டி. எம். சி. தண்ணீர், 97 அடி அளவில் தேங்கி இருந்தது.

கர்நாடக மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை பலனளிக்கும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்து குறுவை சாகுபடி 5.21 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நடந்து முடிந்தது.

நடவு செய்த பயிர்கள் வளர்ந்து, புடை சூழ்ந்து, நெற்கதிர்கள் பால் பிடிக்கும் நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை பேரிடராக வந்தது.

ஜூன் மாதம் தொடங்கும் குறுவை சாகுபடி செப்டம்பர் மாதத்தில் அறுவடையில் முற்றுப் பெறும். இதற்கிடையில் ஆகஸ்ட் மாதத்தில் “சம்பா” நடவு தொடங்கிவிடும். அது செப்டம்பர் மாதம் தீவிரமாகும்.

நடப்பு நீராண்டில் (2023 – 24) கர்நாடக மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை குறைந்து போனதை காரணம் காட்டப்படுகிறது. ஆனால், காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள கிருஷ்ண ராஜ சாகர் அணையிலும், அதற்கு மேலே உள்ள , கபினி, ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய நான்கு அணைகளிலும் தேவைக்கும் கூடுதலாக தண்ணீரை தேக்கி வைத்துள்ளது.

குறுவை பயிர் விளைந்து நிற்கும் நிலையில் கருகி மடியும் பேரபாயம் ஏற்பட்டிருப்பதை ஒன்றிய அரசின் நீர் வளத்துறை அமைச்சகத்துக்கும், காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழுவுக்கும் எடுத்துக் கூறிய தமிழ்நாடு அரசின் நீர் வளத்துறை வினாடிக்கு 15000 கன அடி தண்ணீர், பதினைந்து நாட்களுக்கு திறந்து விடுங்கள். இதன் மூலம் மூன்று மாதம் உழைத்த உழவர் பெருமக்கள், பெரும் சேதரமில்லாமல் தப்பிப் பிழைக்க முடியும். மடியும் நிலையில் உள்ள குறுவை பயிர்கள் உயிர் பிழைத்து உழவர்களை வாழ வைக்கும் என மன்றாடி கேட்டுக் கொண்டது.

தமிழ்நாடு அரசின் முறையீடுகளை அறிந்த கர்நாடக மாநில பாஜகவும், வாட்டல் மடப்பா நாகராஜ் கும்பலும் நாராயண கௌடா தலைமையில் இயங்கும் கன்னட ரக்ஷனா வேதிகே கும்பலும், தமிழ்நாட்டுக்கு எதிராக போர்க் கொடி தூக்கி விட்டனர். இதனால் ஏற்பட்ட அரசியல் சூழலில் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியும் சந்தர்ப்பவாத நிலை எடுக்கிறது. அனைவருமாக சேர்ந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர முடியாது என்று முழங்கி வருகின்றனர்.

வேறு வழிகள் இல்லாத நிலையில் தமிழ்நாடு அரசு ஆகஸ்ட் 14, 2023 உச்சநீதிமன்றத்தை அணுகி, விளைந்து நிற்கும் குறுவைப் பயிர்களை காப்பாற்ற, வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விட உத்தரவு வழங்க கேட்டுக் கொண்டது. .

தமிழ்நாடு அரசின் முறையீட்டை விசாரித்த உச்சநீதிமன்றம் கடந்த 21.09.2023 ஆம் தேதி காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்று குழு ஆகிய அமைப்புகள் தீர்மானித்துள்ள முடிவுகளை செயல் படுத்துவது அதன் கடமைப் பொறுப்புகளாகும். அவைகள் தான் காவிரி நீர் பகிர்வுக்கான தொழில்நுட்ப ரீதியிலான அமைப்புகளாகும். அதில் உச்ச நீதிமன்றம் தற்போது தலையிடாது என்று ஒதுங்கிக் கொண்டது

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஆகஸ்ட் 10 ஆம் தேதி வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் எஞ்சிய நாட்களுக்கு (அதாவது 11.08. 2023 முதல் 30.08. 2023 வரை) தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டது. இதனையும் கர்நாடகம் ஏற்கவில்லை

இதனைத் தொடர்ந்து காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு தமிழ்நாடு அரசின் கோரிக்கை மீது வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீர் 15 நாட்களுக்கு திறந்து விட வேண்டும் என எதிர்பாரத நிலையில், தன்னிச்சையாக அறிவித்தது.

இதனையும் கர்நாடகம் ஏற்காத நிலையில் மழைக் குறைவு, தண்ணீர் பற்றாக்குறை, பெங்களூரு குடிதண்ணீர் தேவை என்ற பழைய பல்லவியை பாடி வரும் நிலையில் வினாடிக்கு 3000 கன அடி தண்ணீர் தர முடியுமா? என்பதை பரிசீலிப்பதாக கூறியுள்ளது

கர்நாடக மாநில அரசும், அரசியல் கட்சிகளும் தமிழ்நாடு எதிர்ப்பு அரசியலை ஆயுதமாக எடுப்பது, மாநிலங்களுக்கு இடையிலான நல்லுறவுக்கு கேடு செய்யும் என்பதை உணர வேண்டும்: வாட்டல் நாகராஜ், கன்னட ரக்ஷனா வேதிகே போன்ற இனவாதக் கும்பலுக்கு வலுச் சேர்க்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே பிரச்சினைகள் எழும் போது அதில் தலையிட்டு தீர்வு காணும் அரசியல் உறுதி கொண்ட ஒன்றிய அரசு இன்றைய தேவையாகும். ஆனால். கடந்த பத்தாண்டுகளாக ஒன்றிய ஆட்சியில் தொடரும் பாஜக, கர்நாடக மாநில அரசியல் ஆதாயம் கருதி தமிழ்நாட்டை வஞ் சிப்பதை தனது அரசின் கொள்கையாக கடைப்பிடித்து வருகிறது

மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதிகளும், ஆறுகளும் ஒரு மாநிலத்திற்கு உடைமையானது என்ற கருத்துக் கூடாது: அவைகள் ஒட்டு மொத்த நாட்டிற்கும் உரிய சொத்து என 2018 திருத்தி வழங்கிய இறுதி தீர்ப்பில் உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்தை அனைவரும் ஏற்க வேண்டும்.

குறுவைபயிர்களின் உயிரை பாதுகாப்பது உடனடிக் கடமை தான், காவிரி நதிநீர் உரிமையை நிலை நாட்டுவது அதைவிட முக்கியமானது. முதன்மையானது என்பதை உணந்து, தமிழகம் ஒன்றுபட்டு செயல்படுது அவசியமாகும்.

# குஜராத் பல்கலைக்கழகத்தில் சனாதன இலக்கிய பாடத்திட்டம் திணிப்பு!




*குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் சனாதன இலக்கியம் என்ற பேரில் சாதிய ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் வைதீக கொள்கைகள் பாடமாக வைக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக ஆங்கிலத் துறையில் இத்தகைய பாடம் திணிக்கப்பட்டுள்ளது வேதங்கள் உபநிடதங்கள் ஆகியவற்றுக்குப் பிந்திய ஆய்வுகளின் போதனைகளை கற்றுத் தரப் போகிறார்களாம்.*

*இலக்கியத்தில் சனாதன இலக்கியம் என்று கற்பிப்பது இதுதான் முதல் முறை. சுமார் 160 மாணவர்கள் இப்பாடத்தை தேர்வு செய்து இருக்கிறார்களா, படிப்படியாக பகவத் கீதை மற்றும் மத அடிப்படை யிலான நூல்கள் விக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.*

*இதுவும் ஒரு குஜராத் மாடல் தான். குஜராத் மாடல் அனைத்திற்கும் வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் முடிவுகட்டும்!*

## வினாடி - வினா

1 இந்தியாவில் உருவான முதல் மொழிவாரி மாநிலத்தின் பெயர் என்ன?

2 இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை (லோக்சபா) முதல் சபாநாயகர் யார்?

3 அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் குடியரசுத்தலைவர் அவசர நிலையை (எமர்ஜென்சி) அறிவிக்கிறார்?

4 1950ல் மக்கள் சீன குடியரசு உருவானபோது, அதனை அங்கீகரித்த முதல் நாடு எது?

5 கலாச்சாரப் புரட்சியின் போது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தவர் யார்?

6 பூமியில் மிகவும் குளிரான இடம் எது?

**விடைகள் 12 ஆம் பக்கம்**



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 26

## ஆபாசத்தை ஆயுதமாய் தரிப்பவர்கள்!

தெற்கு தில்லி நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக இருப்பவர் பிஜேபியின் ரமேஷ் பிதூரி. நாடாளுமன்றத்தில் சமாஜ்வாதி உறுப்பினர் டேனிஷ் அலியை தெருச் சண்டைகளில் பேசப்படும் தரக்குறைவான, இழிந்த, ஆபாச சொற்களைப் பயன்படுத்தி உரத்த குரலில் சரமாரியாகத் திட்டினார்.

அவைத் தலைவர் இருக்கையில் அப்போது இருந்தவர் காங்கிரசின் கொடிக்குண்ணில் சுரேஷ். எத்தனையோ தடவை அமரச் சொன்னார். அதை அவர் பொருட்படுத்தவே இல்லை.

நாடாளுமன்றத்தில் அட்டையை காட்டினார்கள், இருக்கையை விட்டு வெளியே வந்து சத்தம் போட்டார்கள், புகைப்படம் எடுத்தார்கள் என்ற காரணங்களுக்காக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ரஞ்சன் சவுத்ரி உட்பட 62க்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த ஐந்து ஆண்டுகளில், அவைத் தலைவர் ஓம் பிர்லா இடைநீக்கம் செய்திருக்கிறார்.

அதிலும் சம்பந்தப்பட்ட உறுப்பினர் நடந்து கொண்ட முறை அவமதிப்புக்குரியது தானா என்பதை நாடாளுமன்ற உரிமை குழுவுக்கு அனுப்பி அதில் பதில் வரும் வரை இடை நீக்கம் என்று கூட தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது போன்ற மோசமான வார்த்தைகளை பேசிய ரமேஷ் பிதூரிக்கு, வெறும் எச்சரிக்கை மட்டுமே தரப்பட்டது.

பிஜேபியின் பெரிய தலைவர்களாக கொண்டாடப் படுகிற ரவிசங்கர் பிரசாத், ஹர்ஷ்வர்தன் ஆகியோர், அந்தப் பிதூரி பேசும் போது அருகமர்ந்து மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் அவர் பேசியதை ஆதரிக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள்தான். இறந்த கணவனின் உடலோடு சேர்த்து மனைவியை உடன்கட்டை ஏற வைப்பதையும், பிறப்பினால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று வகை பிரிப்பதையும் தாம் ஆதரிக்கவில்லை என்றும் சொல்வார்கள்; ஆனால் அதற்குக் காரணமான, சனாதனத்தை ஒழிப்போம் என்றால் பொங்குவார்கள்.

இதே போன்ற வகைச் சொற்களை பிரதமர் மோடியே பலமுறை பயன்படுத்தியிருக்கிறார். 2002ல் குஜராத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமை முறையில் மூலமாகத்தான் அவர் பிரபலமானார். அதை வைத்து தான், கார்ப்பரேட்டுகளும், தொழிலதிபர்களும், மடங்களும் சேர்ந்து, எங்கள் விருப்பப்படி இந்தியாவை வளைத்து போட, பொருத்தமான ஆள் உன்னை விட்டால் யாருமில்லை என்று காற்று அடித்த பலூன் போல் பேருருவமாக்கி ஆட்சியில் அமர வைத்தனர்..

சிறுபான்மையினர் மீதான வெறுப்பை மோடி மறைத்ததில்லை. வெறுப்பைக் கக்கும் முழக்கங்களை அவர் வழக்கமாகவே எழுப்பிக் கொண்டிருக்கிறார். அவ்வாறு பேசுவதனாலேயே, மனிதத்தை தொலைத்தவர்கள் விரும்புவதால், அதனை ஒருபோதும் கைவிட மாட்டார்.

நெஞ்சில் ஈரமே இல்லாதவர்களால் முஸ்லிம்கள் கொல்லப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வதைக்கப்பட்ட போதெல்லாம், அதற்கு அவர்களையே காரணமாக்கி, வதைத்தவர்களை பாதுகாப்பது ஆர்எஸ்எஸ் பிஜேபியின் அச்சாணி கலாச்சாரம்.

இகழ்ந்து வசை பாடுவதை எதிர்த்து சிறுபான்மையினர் பேச முடியாத நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். திரும்பத் திரும்ப இவ்வாறு இழிவு படுத்துவதன் மூலம், நீ தரம் தாழ்ந்தவன் என்று உணர்த்துகிறார்கள். அவர்களது பாடல்கள், கோஷங்கள் எல்லாவற்றிலும் இழிவுபடுத்தும் சொல் இல்லாமல் இருக்காது. முஸ்லிம்கள் மட்டுமல்ல; இவ்வாறு பேசுவது தவறு என்று கருதும் பெரும்பான்மை இந்து மக்களே கூட இதைத் தட்டிக் கேட்க முடியாது.

அடங்கிப் போ! இன்னும் திட்டுவோம். மானத்தை உதிர்த்து விடு. சிலிர்த்து எழுந்தால் அதையே காரணமாக்கி கலகம் செய்வோம்; கொலை செய்வோம், வல்லுறவு, சொத்துக்களை அழித்தல் உள்ளிட்ட அனைத்து வன்முறைகளில் ஈடுபடுவோம். உன்னை ஆதரிக்க நாதி கிடையாது என்று மிரட்டி வைப்பதே அவர்களின் தந்திரம்.

யார் மிக மோசமாக திட்டுகிறார்களோ, வன்முறையில் ஈடுபடுகிறார்களோ அவர் பிஜேபியில் இன்னும் உயர்ந்த பதவிகளுக்குப் போக முடியும். மோடியும் யோகியும் திட்டுவதை விட இன்னும் அதிகமாக பேசுகிறார்கள் என்பது அவர்களுக்குப் பெருமை.

“ஒரு முஸ்லிம் பையன், இந்துப் பெண்ணை பார்த்தாலே போதும்; அவன் குடும்பத்துப் பெண்ணை வல்லுறவு செய்து கர்ப்பமாக்கு” என்று அவர்கள் கூட்டிய ‘தர்ம சன்சத்’ மாநாட்டில் சாத்வி விபானந்த கிரி என்ற பெண் துறவி அறிவுரைத்திருக்கிறார்.

மனித நேயம் உள்ள எந்த இந்துவும் இவற்றை ஏற்க மாட்டார். இந்து மதம் வேறு; இந்துத்துவா அதற்கு நேர் எதிர். இந்தியாவின் தர்மம், இந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்கும்; முறியடித்தே தீரும்.

# உழைக்கும் மக்களே தெய்வங்கள்!

## பினாய் விஸ்வம் எம்.பி. உரை!

ஏஐடியுசி தேசிய பொதுக்குழு நிறைவு திருப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் அகில இந்திய செயல் தலைவரும் கேரளா மாநில முன்னாள் வனத்துறை அமைச்சருமான பினாய் விஸ்வம் எம்.பி. ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

தோழர்களுக்கு செவ்வணக்கம். கேரள மக்களும் தமிழ் மக்களும் அண்டை மாநிலத்தவர் அல்ல; நாம் ஒட்டிப் பிறந்த சகோதரர்கள். நமது பண்பாடும், சிந்தனைகளும், போராட்டமும், லட்சியமும் ஒன்றே தான்.

நாடாளுமன்றத்தில் மோடி பேசும் போதெல்லாம் அவரது கூட்டணி எம்பிக்கள் மோடி, மோடி என்று கத்துகிறார்கள். அதை எதிர்க்க நாங்கள் இந்தியா இந்தியா என்று கூவுகிறோம். ஏனென்றால் இந்தியாவுக்கு எதிரானவர் மோடி.

### கொக்கின் கதை

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை கொண்டு வர நேர்ந்தது.

செங்கோட்டை மீது ஏறி நின்று இரண்டு மணி 13 நிமிடம் தனது நீளமான நாக்கால் 56 அங்குள்ள நெஞ்சை விரித்துக் கொண்டு பேசிய மோடிக்கு, மணிப்பூர் பற்றி நான்கு வரிகள் மட்டுமே பேச முடிந்தது. கண்ணகி விட்ட சாபம் பாண்டிய மன்னனை வீழ்த்தியது. மணிப்பூர் பெண்களின் சாபம் மோடி அரசை வீழ்த்தும்.

### திரௌபதி அன்றும், இன்றும்:

பாண்டவர்கள் கட்டிய மாளிகையை திறந்து போது, திரௌபதி சிரித்தாள் என்பதால், மக்கள் திரள் முன்னிலையில் அவள் ஆடையை உருவினார்கள். தீய ஆட்சியாளனைக் கொன்று அவன் ரத்தத்தை தடவித்தான் கூந்தல் முடிப்பேன் என்று முடியை அவிழ்த்து விட்டதாக மகாபாரத கதை கூறுகிறது.

இப்போதும் ஒரு திரௌபதி இருக்கிறார். அவர் நம் நாட்டின் முப்படைகளின் தலைவர். இந்திய




குடியரசுக்கே தலைவர். புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்பட்ட போது அவர் அழைக்கப்படவே இல்லை. ஏனென்றால் இந்து சாஸ்திரங்களின்படி சுப காரியங்களில், அமங்கலி வரக்கூடாது ! இப்போது நடைபெற்ற கூட்டத்தில் கொடியேற்றுவதற்கு கூட அவர் அனுமதிக்கப்படவில்லை. குடியரசு துணைத் தலைவர் ஏற்றினார்.

தீமைகள் கொன்றழிக்கப்படும் வரை, அள்ளி முடிக்க மாட்டேன் என்று விரித்து விடப்பட்ட பாஞ் சாலியின் கூந்தல் இன்னும் முடியப்படாமலேயே இருக்கிறது.

உழைக்கும் மக்கள் உருவாக்கிய செல்வங்களை எல்லாம் பறித்து ஒன்றிரண்டு கோடீஸ்வரர் கையில் கொடுக்கும் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளும் நிதி மூலதனமும்தான் இந்த சமூகத்தின் தீமைகள். நவீன பாஞ்சாலி இந்த தீமைகளை கொன்றழிப்பாள்.

அந்தப் பாஞ்சாலியைக் காப்பாற்ற தெய்வம் வந்தது என்பார்கள். ஏஐடியுசி யைப் பொறுத்தவரை உழைக்கும் மக்களான நீங்கள் தான் தெய்வங்கள். அக்கிரமத்தை ஒழித்து நாட்டைக் காப்பாற்ற முன் வாருங்கள்’ என்று பினாய் விஸ்வம் எம்பி பேசினார். அவரது பேச்சை ஏஐடியுசி மாநில செயலாளர் ஏ. பாஸ்கர் மொழி பெயர்த்தார்.

கொண்டு வந்து விட்டதாக மோடி பெருமை அடித்துக்கொள்கிறார். ஆனால் அது எப்போது அமலாகும்? ஐந்து வருடமா, 10 வருடங்கள் கழித்தா, 20 ஆண்டு ஆகுமா என்று தெரியாது. மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி, தொகுதி வரையறை செய்து....வரும் ஆனால் வராது !

ஒருவன் விருந்து வைப்பதாக கொக்கு ஒன்றை அழைத்தான். நன்றாக சூப் தயாரித்தான். அதனை அகன்ற தாம்பாளத்தில் ஊற்றினான். நிறைய சூப் இருந்தாலும், தட்டில் அது அரை அங்குல உயரம் கூட இல்லை. கொக்கு தன் அலகை தட்டில் வைக்க முடியுமே தவிர ஒரு சொட்டைக் கூட உறிஞ்ச முடியாது. இந்தப் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவும் அப்படித்தான்.

### கண்ணகிகள் வாழ்கிறார்கள்:

மணிப்பூரில் குக்கி இனப் பெண்கள் ஆடை இன்றி தெருவில் இழுத்து வரப்படுவதைப் பார்த்து நாடே கொதித்தது; கண்ணீர் சிந்தியது. ஆனால் இந்த நாட்டின் பிரதமர் அதை கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவரை நாடாளுமன்றத்துக்கு வரவழைத்துப் பேச வைக்க ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

### 4. ஜம்மு காஷ்மீரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மீதான தாக்குதலுக்கு கண்டனம்:

2023 செப்டம்பர் 18,அன்று உதம்பூரில் நடந்த அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஜம்மு காஷ்மீர் மாநில மாநாட்டின் மீது ஏபிவிபி–ஆர்எஸ்எஸ் குண்டர்கள் நடத்திய தாக்குதலையும், அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காவல்துறை மற்றும் துணை ராணுவ நடவடிக்கையையும் தேசிய நிர்வாகக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆளும் கட்சி கும்பலின் வழிகாட்டுதலின் கீழ் உதம்பூரில் மாணவர் பெருமன்றத்தின் மாநில மாநாட்டை நிறுத்த காவல்துறை மற்றும் துணை ராணுவப் படைகள் எல்லா வழிகளிலும் முயன்றன. ஏபிவிபி மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பினர் போலீஸ் படை முன்னிலையில் பிரதிநிதிகளை மூர்க்கமாக தாக்கினர், ஏஐஎஸ்எப் அகில இந்திய தலைவரைக் கூட விட்டுவைக்காமல், காவல்துறையினர் வாய்மூடி பார்வையாளர்களாக இருந்தனர். தேச விரோதிகள் என்பதால் இடதுசாரி அமைப்புகளின் எந்த நிகழ்ச்சியையும் அனுமதிக்க முடியாது என்று காவல்துறை தெரிவித்தது, அடக்கு முறையின் உச்சமாகும். இது அரசியல் சாசன உரிமைகளை மீறுவதாகும். இந்த நாட்டில் இடதுசாரி அமைப்புகள் தடை செய்யப்படவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் போராடி பல தேசிய தலைவர்களை வழங்கிய முதல் மாணவர் அமைப்பு ஏஐஎஸ்எஃப் ஆகும்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட ஏபிவிபி – ஆர்எஸ்எஸ், காவல்துறை மற்றும் துணை ராணுவப் படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இத்தகைய பாசிச தாக்குதல்களை ஒன்றுபட்டு எதிர்த்து முறியடிக்க முன்வருமாறு ஜம்மு காஷ்மீர் மட்டுமின்றி, நாட்டிலுள்ள அனைத்து ஜனநாயக மனப்பான்மை கொண்ட மக்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

# நாரி சக்தி அல்ல பாஜகவின் நரி யுக்தி!



த.லெனின்



**நாடாளுமன்றக் கூட்டங்கள் ஆறு மாத இடைவெளியில் கூட்டப்பட வேண்டும். அவை முறையேபட்ஜெட் கூட்டம் (பிப்ரவரி – மே) மழைக்கால கூட்டம் (ஜூலை – ஆகஸ்ட்) குளிர்கால கூட்டம் (நவம்பர் – டிசம்பர்) 2023 மழைக்காலக் கூட்டத் தொடர் 23 நாட்கள் நடந்தது. மக்களவையில் 20 மசோதாக்கள், மாநிலங்களவையில் 5 மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மக்களவை 22 மசோதாக்களையும், மாநிலங்களவை 25 மசோதாக்களையும் நிறைவேற்றின. ஆகஸ்ட் 11ம் தேதியுடன் கூட்டத் தொடர் முடித்து வைக்கப்பட்டது.**

திடீரென செப்டம்பர் 18 முதல் 22 வரை சிறப்புக் கூட்டம் நடத்தப்போவதாக மோடி அரசு அறிவித்தது. ஆனால் என்ன விஷயத்துக்காக கூட்டம் நடத்தப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படவே இல்லை.

முதல் நாளில் பழைய கட்டிடத்தில் நடந்து, அதற்கு விடை கொடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரின் முதல் நாள் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இதுவரை இந்த நாடாளுமன்றத்தில் நடந்தவை அனைத்தும் நமது பாரம்பரியம் என்று கூறினார்.

புதிய நாடாளுமன்ற கட்டிடத்திற்கு செல்வது குறித்து அவர் பேசியபோது ‘‘இந்த அவையில் இருந்து விடைபெறுவது மிகவும் உணர்ச்சிகரமான தருணம். முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இந்த அவைக்குள் நுழைந்த போது தலைவணங்கி இந்த அவைக்குள் நுழைந்தேன். ஜனநாயகத்தின் கோவிலான இதை நான் வணங்குகிறேன்,’’ என்றார். இப்படி அவர் பேசும்போது நாடாளுமன்றம் நடக்கும் போதெல்லாம் அவர் அதில் பங்கேற்பதை தவிர்த்தார் என்பதும் நினைவுக்கு வருகிறது ஒரு பிரதமரின் நாடாளுமன்ற பங்கேற்பு 0.001%ஆக இருப்பது சேர்ந்தே நினைவுக்கு வருகிறது

மகளிருக்கான 33 சத இட ஒதுக்கீடு மசோதா:–

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டது. அதைத் தாக்கல் செல்வதற்காக தன்னை கடவுள் அனுப்பி வைத்திருப்பதாக மோடி பெருமையடித்துக்கொண்டார்.அதற்கு நாரி சக்தி வந்தன் என்று இந்தியில் பெயர் வைத்திருந்தது உண்மையில் தேர்தலுக்கான பாஜகவின் நரியுத்தி ஆகத்தான் இது அமைந்தது. எனவேதான் இதனை ரகசியமாகக் கொண்டு வந்தார்கள். இந்தியா கூட்டணி ஏற்பட்டு விட்ட நிலையில்கடும் பதட்டத்திற்கும் அச்சத்திற்கும் ஆளான பாஜக இது போன்று அவசர கோலத்தில் போகாத ஊருக்கு வழி சொல்லும் பல நடவடிக்கைகளில் இறங்குவது தெளிவாகிறது.

நமது கேள்வி என்னவென்றால் இஸ்லாமிய பெண்களின் துயரத்தை துடைக்க உடனடியாக அமலுக்கு வந்த முத்தலாக் சட்டம் போல, காஷ்மீரின் சிறப்பு சட்டம் 370 நீக்கியதை போல, மூன்று வேளாண் திருத்தச் சட்டங்களை அவசர அவசரமாக கொண்டு வந்தது போல இப்போது இந்த சட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றி வரும் நாடாளுமன்றத் தேர்தலிலேயே அதனை அமலாக்குவதை யார் தடுத்தது? அதனை ஏன் அவர்கள் செய்ய மறுத்தார்கள் என்பதில் தான் இதற்கான விடை இருக்கிறது

1931 ஆம் ஆண்டு அப்போதைய பிரிட்டிஷ் பிரதமருக்கு பெண்களின் நிலை குறித்து பேகம் ஷா நவாஸ் மற்றும் சரோஜினி நாயுடு ஆகியோர் பேசியுள்ளதுடன் பெண்களுக்கான நேரடி நியமனத்தை விட நேரடி தேர்தலில் தேர்வு பெறுவதுதான் சிறந்தது என்பதையும் அவர்கள் தெரி வித்துள்ளனர் அரசியல் நிர்ணய சபையில் 15 பெண்கள் பங்கேற்றிருக்கிறார்கள்.

நமது அரசமைப்புச் சட்டம் உறுதி அளித்தது போல சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் நீதி கிடைக்கும் என்பது பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் இதுவரை கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை

கடந்த 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒரு குழு இந்திய பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைந்து வருவது குறித்து சுட்டிக்காட்டியது. நாடு முழுவதும் பல்வேறு பெண்கள் அமைப்புகள் 33% முக்கியத்துவம் குறித்து பேச ஆரம்பித்தன. அதற்கான தொடர் போராட்டங்களையும் நடத்தினர். இப்போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ரேணு சக்கரவர்த்தி முன்னிலையில் இருந்தார். இந்நிலையில் ஏழு முறை மக்களவை உறுப்பினராக இருந்த விடுதலைப் போராட்ட வீரர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கீதா முகர்ஜி தலைமையில் நாடாளுமன்ற நிலைக்குழு உருவாக்கப்பட்டது. அதுவும் தனது 33% இட ஒதுக்கீட்டு பரிந்துரையை வழங்கியது.

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 73 மற்றும் 74 வது சட்ட திருத்தத்தின் படி அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் பஞ்சாயத்து ராஜ் நகர் பாலி கா சட்டம் அமலுக்கு வந்தது 33 விழுக்காடு மகளிர் காண இட ஒதுக்கீட்டை உறுதி செய்தது. இதனை பல மாநிலங்கள் குறிப்பாக மகாராஷ்டிரா, தமிழ்நாடு 50% ஆக உயர்த்தி உள்ளன. எனவே பெண்களுக்கான இட ஒதுக்கீடு ஏற்கனவே உள்ளாட்சிகளில் இருக்கும் நிலையில் நல்லாட்சி நாயகன் மோடிதான் கொண்டு வந்தார். அதற்காக புகழ் மாலை சூட்டுவதும் அவர்களே தங்களை பாராட்டிக்கொள்வதும் எந்த அளவிற்கு பொருந்தாத ஒன்று என்பதை இதையெல்லாம் காட்டிவிட்டது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் 14% தான் பெண்கள் அலங்கரிக்கின்றனர். பாஜகவின் ஒன்றிய அமைச்சரவையில் 5% பெண்கள்தான் இடம்பெற்றிருக்கின்றனர். இது உலக நாடுகளோடு ஒப்பிடுகிற போது மிகக் குறைந்தது. உலக அளவில் பெண்களின் பிரதிநிதித்துவம் 22.4%ஆக உள்ளது உலக அளவில் இந்தியா 103 வது இடத்திலும் ஆசிய அளவில் உள்ள 18 நாடுகளில் 13 வது இடத்திலும் உள்ளது. பெரும் இனப்படுகொலைகள் நடந்த ருவாண்டாவில் 63.8% பொலிவியா 53% கியூபா 49% தென்னாப்பிரிக்கா 42% ஈக்வேடா 41% இஸ்லாமிய நாடுகளாக அறியப்படும் ஈராக் 44% தெற்கு சூடான் 44% பிலிப்பைன்ஸ் 27% வியட்நாம் 24% இதற்கு முன்பு அதாவது தலிபான்களுக்கு முன்பு வரை ஆப்கான் 27.7% சீனம் 23% பாகிஸ்தான் பங்களாதேஷ் 20% அமெரிக்கா 19.3% என்ற நிலையில் இந்தியாவின் பெண்கள் பிரதிநிதித்துவம் அனைத்து வகைகளிலும் மிகக் குறைந்திருப்பது கண் கூடு.

உண்மையில் பெண்களை அதிகாரப்படுத்தும் அரசியலில் பாஜகவிற்கு நம்பிக்கை இருந்திருந்தால் 9 ஆண்டுகள் ஒரு நீண்ட கும்பகர்ண தூக்கம் இதற்கு தேவைப்பட்டிருக்காது. ஏற்கனவே மோடி அறிவித்த தேர்தலுக்காக 15 லட்சம் ரூபாய் அனைவரின் வங்கி கணக்கில் செலுத்துவோம் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை. ஒதுக்கப்பட்ட கருப்பு பணத்தை திரும்ப கொண்டு வருவோம். ஊழலுக்கு முடிவு கட்டுவோம் அனைவருக்கும் வீடு பெட்ரோல் டீசல் விலையை குறைப்போம். 40 ரூபாய்க்கு ஒரு டாலர் புல்லட் ரயில் என்ற அறிவிப்புகளின் வரிசையில் பெண்களின் இட ஒதுக்கீடும் அமைந்துவிட்டது என்பதுதான் உண்மை.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வரும்போது ஒரு பெண் குடியரசுத் தலைவர் அக் கூட்டத்திற்கு அழைக்கப்படாதது பாஜகவின் அற்பத்தனத்திற்கு அதிசிறந்த எடுத்துக்காட்டு. இப்போது கொண்டு வரப்பட்ட இந்த சட்ட திருத்தம் அமலாக வேண்டும் என்றால் அரசமைப்புச் சட்டம் 82 (2001 இல் தெரிவித்துப்பட்ட பிறகு) அதன்படி மக்கள் தொகை கணக்கெடுப்பு வரும் 2031 ல் தான் நடைபெற வாய்ப்பு உள்ளது. அதன் பிறகு அந்த மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறு வரைவு செய்ய ஐந்தாண்டுகள் ஆகும். எனவே 33 சத பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்த 2039 ஆம் ஆண்டு தேர்தலில் தான் முடியும் என்பது தான் உண்மையாகும்.

மண்டல குழு பரிந்துரையின் போது சாதி வாரி கணக்கெடுப்பு இல்லாத காரணத்தால் ஆங்கிலேயர் காலத்தில் எடுக்கப்பட்ட அந்த சாதி வாரி கணக்கெடுப்பையே பயன்படுத்தி இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 % இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது.

அதுபோல இவர்கள் உண்மையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என்றால் 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்திருக்கலாம். ஆனால் நரி தந்திரமாக அவற்றையெல்லாம் தவிர்த்து விட்டு இப்போது பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்து வந்தோம் என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப பெண்களுக்கான உரிமையை தந்து விட்டதாக தங்களை தாங்களே புகழ்ந்து கொள்வது எவ்வளவு அற்பத்தனமானது என்பது இதன் மூலம் விளங்கும். இப்படி கொண்டுவரப்பட்ட இந்த இட ஒதுக்கீடு கூட மாநிலங்களவையில் இல்லை. டெல்லியை தவிர்த்த யூனியன் பிரதேசங்களிலும் இல்லை. ஆனால் அங்குலம் நகராட்சி உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்கனவே பெண்கள் இட ஒதுக்கீட்டு உரிமையை பெற்றிருக்கின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஒதுக்கீடு தேவை என்ற குரலும் வலுவாக ஒலிக்கிறது. எனவே இது பாஜகவின் அரைக்கிணறு தாண்டு முயற்சி என்பதை தவிர வேறு என்ன?எனவே மக்கள் போராட்டங்களின் மூலம் தான் மகத்தான மாற்றங்கள் விளைந்திருக்கின்றன. அந்த வகையில் பெண்களுக்கான இட ஒதுக்கீடும் போராடி பெறப்பட்டுள்ளது.

இந்திய ஜனநாயகத்தை கல்வி பிடிக்கிற இந்த காவி பாசிஸ்டுகளை ஆட்சியில் இருந்து விரட்டுவதன் மூலம் ஒரு பண்பட்ட ஜனநாயக மாராட்சியை இந்திய கூட்டணி மத்தியிலே ஏற்படுத்தும். அது மகளிர்க்கான இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தும். அந்த காலம் வெகு தொலைவில் இல்லை.

தொடர்புக்கு: 9444481703



ஜி.ஆர்.இரவீந்திரநாத்



ஏ.ஆர்.சாந்தி

# முதுநிலை மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை பிரச்சினைகளும் தீர்வுகளும்

**முதுநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கையில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. அதை தீர்க்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசிற்கு உள்ளது.**

இன்றைய முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்பில், மருத்துவக் கல்வியும், மருத்துவ சேவையும் தனியார் மயமாகியுள்ளது. வணிகமயமாகியுள்ளது. அவை சரக்குகளாக மாற்றப் பட்டுள்ளன. இவை பாரபட்ச போக்குகளை உருவாக்குகின்றன. சமூக நீதிக்கு சமாதி கட்டுகின்றன. வசதி படைத்தோருக்கு வாய்ப்புகளை வாரி வழங்குகின்றன. ஏழைகளை புறக்கணிப்புக்கு உள்ளாக்குகின்றன. இப்பிரச்சினைக்களை முழுமையாக ஆராய்ந்து, சரியான தீர்வுகளை காண வேண்டும்.

முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்பே, மருத்துவக் கல்வியும் ,சேவையும் தனியார் மயமாக, வணிகமயமாக அடிப்படைக் காரணமாகியுள்ளது. முதலாளித்துவமே பிரச்சினையின் ஊற்றுக் கண்.

இன்று மருத்துவக் கல்வியில், மருத்துவ சேவையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சோஷலிசமே தீர்வாக அமையும். முதலாளித்துவத்திற்குள் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இயலாது. சீர்திருத்தம் (Reforms) என்ற ``டிங்கரிங் வேலை'' யை எவ்வளவுதான் செய்தாலும், சீர் கெட்டு விட்ட முதலாளித்துவ சமூக அமைப்பின் மருத்துவக் கல்வியை, சேவையை முழுமையாக சரிசெய்ய இயலாது. ஏனெனில் இத்துறைகளின் பிரச்சினைகளை தனியாக பிரித்துப் பார்க்க இயலாது. ஒட்டு மொத்த சமூகப் பொருளாதார அமைப்பின் சீர்கேடுகளோடு அவை தொடர்பு கொண்டவை, பின்னிப் பிணைந்தவை.

ஆனால், பிரச்சினைகளை முழுமையாக அலசி ஆராயாமல், பிரச்சினைகளை தவறாகப் புரிந்து கொண்டு ,தவறான தீர்வுகளை முன்வைக்கப்படுகின்றன. அதை சில முதலாளித்துவ சிந்தனையாளர்கள் திட்டமிட்டே செய்தும் வருகின்றனர். முதலாளித்து வத்திற்குள்ளேயே அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியும் என்ற தவறான நம்பிக்கையை உருவாக்கிவருகின்றனர். முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை படைப்பதற்கான, சமூகப் பொருளாதார மாற்றத்திற்கான போராட்டங்களை மழுங்கடிக்கின்றனர். இதன் மூலம், முதலாளித்துவம் தொடர்வதற்கு உதவுகின்றனர். அவர்களின் இத்தகைய போக்கு சமூக நீதியை சீர்குலைக்கும். பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகர்வதற்கு பதிலாக திசை திருப்பவே உதவும். பிரச்சனைகள் நீடிக்கவே உதவும்.

### கட் ஆஃப் மதிப்பெண் குறைப்புப் பிரச்சினை

அடிப்படை பிரச்சினையிலிருந்து திசை திருப்பும் விடயங்களில் , முதுநிலை மருத்துவக்கல்வி மாணவர் சேர்க்கைக்கான நீட் கட் ஆஃப் மதிப்பெண்ணை குறைக்கக் கூடாது என்பதும் ஒன்று. மேலும், முதுநிலை மருத்துவப் படிப்பிற்கு, உயர் சிறப்பு மருத்துவப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வே கூடாது. நுழைவுத் தேர்வு என்பதையே முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும். எம்.பி.பி.எஸ் இறுதியாண்டு மதிப்பெண்ணையும், முதுநிலை மருத்துவப் படிப்பு மதிப்பெண்ணையும் வைத்து மாணவர் சேர்க்கையையும் நடத்திட வேண்டும் என்பவையும் ஆகும்.

நீட் தேர்வின் கட் ஆஃப் பர்சன்டைலை ,பூஜ்ஜியமாக குறைத்திருப்பது தகுதியை,திறமையை பாதிக்கும் என்றெல்லாம் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. இவை சரியல்ல. தவறான பார்வையாகும். தவறான அணுகுமுறையாகும். மருத்துவப் படிப்புகளுக்கு இன்றைய நிலைமைகளில் நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்யவேண்டும் என்பது பல்வேறு பாரபட்சங்களை, முறைகேடுகளை உருவாக்கும். பிரச்சனைகளை மேலும் மோசமாக்கும்.



### கட் ஆஃப் மதிப்பெண் அவசியமா?

நுழைவுத் தேர்வு என்பது ஒரு போட்டித் தேர்வு. அது , ஒருவர் ஒரு படிப்பில் தகுதி பெற்றுவிட்டாரா இல்லையா என கண்டறிவதற்கான தகுதிகாண் (Qualifying examination) தேர்வல்ல. ஏற்கனவே ஒரு படிப்பில் அடிப்படைத் தகுதியுடன், தேர்ச்சி பெற்றவர்களுக்கு, அடுத்தக்கட்டமாக ஒரு வேலை வாய்ப்பிற்காகவோ ,மேல் படிப்புக்காகவோ நடத்தப்படும் தேர்வே போட்டித் தேர்வு ஆகும். எனவே அந்தப் போட்டித் தேர்வில் மீண்டும் தேர்ச்சி , தோல்வி ( Pass or Fail ) குறைந்தபட்ச கட் ஆஃப் போன்றவை அவசியமில்லை.

உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறைவாக இருக்கும் பொழுது அவற்றிற்கு போட்டி கடுமையாக இருக்கும் பொழுது, முறைகேடுகளும், ஊழலும், பாரபட்சமுமின்றி. தகுதி அடிப்படையில் அந்த இடங்களை நிரப்புவதற்கான வழிமுறை போட்டித்தேர்வு மட்டுமே. எனவே அதில் தேர்ச்சி பெற குறைந்த பட்ச மதிப்பெண் என்பதை நிர்ணயிக்க வேண்டியதில்லை.

### தமிழ்நாட்டில் சமூக நீதிக்கு ஏற்பட்ட பாதிப்பு

முதுநிலை மருத்துவம் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளில் ,தேர்ச்சி பெறுவதற்கு குறைந்த பட்ச மதிப்பெண்ணை 40% ஆக உச்ச நீதிமன்றம் நிர்ணயித்ததால், தமிழ்நாடு அரசு நடத்திய நுழைவுத் தேர்வு அடிப்படையில் முதுநிலை மாணவர் சேர்க்கையை நடத்திய பொழுது, பி.சி முஸ்லீம் BC(M), எஸ்.சி(ஏ) SC(A) மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான இடங்களை அப்பயனாளிகள் முழுமையாகப் பெற முடியவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில், அப்பிரிவுகளில், 40 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் வாங்கியவர்கள் போதிய அளவில் இல்லை. எனவே ஆண்டுதோறும் பல இடங்கள் அவர்களுக்கு கிட்டாமல் போனது. பி.சி(எம்) இடங்கள் பி.சிக்கும், எஸ்.சி (ஏ) இடங்கள் எஸ்.சி க்கும் சென்றுவிட்டன. கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை பி.சி(எம்) ,எஸ்.சி (ஏ) பிரிவினருக்கு ஏற்பட்டது.

எனவே, ஒரு நுழைவுத் தேர்வில் குறைந்த பட்ச தகுதி மதிப்பெண் என்பதை நிர்ண யிப் பதை கைவிட வேண்டும். முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர்வதற்கான தகுதி என்பது, எம்.பி.பி.எஸ் படிப்பில் தேர்ச்சி பெற்று மருத்துவராக பதிவு செய்திருக்க வேண்டும் என்பதுதான்.

அதே சமயம், மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் , இறுதிக்கட்ட மாணவர் சேர்க்கையின் பொழுது , கட் ஆப் மதிப்பெண்ணை குறைப்பது என்பதும், தனியார் மருத்துவக் கல்லூரிகளை நேரடியாக மாணவர் சேர்க்கையை நடத்திக் கொள்ள அனுமதிப்பதும், தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதகமானதாகும். அதிக மதிப்பெண் வாங்கிய மாணவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகும். மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையை சூதாட்டம் (Gambling ) போல் மாற்றும் இத்தகைய நடைமுறைகளை ஒன்றிய அரசு கைவிட வேண்டும். அதை ஏற்கமுடியாது.

அதே வேளையில், மருத்துவ இடங்கள் காலியாக போவதையும், முறைகேடுகளையும் தடுக்கும் வகையிலும், தகுதி அடிப்படையிலான மாணவர் சேர்க்கையை உறுதி செய்திடும் வகையிலும் ,சமூக நீதியை காத்திடும் வகையிலும் மாணவர் சேர்க்கை நடைமுறைகளை வகுத்திட வேண்டும்.

## என்ன செய்ய வேண்டும்?

1. மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கு மாநில அரசும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கு ஒன்றிய அரசும் மட்டுமே மாணவர் சேர்க்கையை நடத்திட வேண்டும்.
2. தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையை எக்காரணம் கொண்டும் , அந்நிறுவனங்களே நேரடியாக நடத்திக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. அவைகளுக்கு மாப் அப் கவுன்சிலிங் மற்றும் ஸ்ட்ரே கவுன்சிலிங் நடத்திட அனுமதி வழங்கிடக் கூடாது. தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் நேரடியாக மாணவர் சேர்க்கையில் ஈடுபட அனுமதிப்பதே அனைத்து முறைகேடுகளுக்கும் காரணமாக உள்ளது.
3. தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை மருத்துவக் கல்லூரிகளின் 100 விழுக்காடு இடங்களுக்கும் மாநில மற்றும் ஒன்றிய அரசுகளே கட்டணத்தை நியாயமான முறையில் நிர்ணயித்திட வேண்டும்.
4. ஏழை மாணவர்களின் கல்விக்கட்டணத்தை அரசே ஏற்க வேண்டும். வேலைக்குச் சென்ற பிறகு ,கடனை திருப்பி செலுத்தும் வகையில், மாணவர்களுக்கு வட்டி இல்லாத கல்விக் கடன்களை வழங்கிட வேண்டும்.
5. கட்டணத்தை கவுன்சிலிங் பொழுதே ஜிஜி மூலம் செலுத்தும் முறையை கொண்டுவர வேண்டும். தனியார் மருத்துவகல்வி நிறுவனங்கள் கட்டணத்தை பணமாக வசூல் செய்வதையும், ரசீதுகள் வழங்காமல் கட்டணங்கள் வசூலிப்பதையும், கட்டாய நன்கொடைகள் பெறுவதையும் தடுக்க வேண்டும்.
6. கட்டாய நன்கொடைச் சட்டத்தை வலுப்படுத்தி, கறாராக நடைமுறை படுத்த வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூல் செய்யும் நிறுவனங்கள் மீது கட்டாய நன்கொடைச் சட்டம் மூலம் கடும் நடவடிக்கை எடுத்திட வேண்டும். தொடர்ந்து தவறு செய்யும் நிறுவனங்களை எந்த இழப்பீடுமின்றி அரசுடமையாக்க வேண்டும்.
7. நுழைவுத் தேர்வுகளில், சமூக நீதிக்கு எதிராக குறைந்த பட்ச தகுதி மதிப்பெண் நிர்ணயிப்பதை ரத்து செய்ய வேண்டும். தரவரிசை (rank) அடிப்படையில், இட ஒதுக்கீட்டையும் முழுமையாக பின்பற்றி கடைசி இடம் நிரம்பும் வரை மாநில மற்றும் ஒன்றிய அரசுகளே மாணவர் சேர்க்கையை இறுதிவரை நடத்திட வேண்டும். அவ்வாறு செய்தால் , முறைகேடுகள் நடக்காது. அதிக மதிப்பெண் பெற்றோரே இடங்களை பெறமுடியும். குறைந்த மதிப்பெண் பெற்றவர்கள் இடங்களை பெற முடியாது. அதே சமயம், சமூக நீதியும் காக்கப்படும். இடங்கள் காலியாகப் போவதும் குறையும்.
8. தனியார் நிகர்நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களிலும் இட ஒதுக்கீட்டை நடைமுறைபடுத்திட வேண்டும்.
9. கார்பரேட் கம்பெனிகள் மருத்துவக் கல்லூரிகளை தொடங்க அனுமதிக்கக்கூடாது.
10. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளே அதிக அளவில் மருத்துவக் கல்லூரிகளை தொடங்கிட வேண்டும்.
11. படிப்படியாக அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரிகளையும் அரசுடமையாக்கிட வேண்டும்.
12. புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கிட தனியாருக்கு அனுமதி வழங்கிடக் கூடாது.
13. ''பொது தனியார் பங்களிப்பு (பிபிபி) மாதிரியில் , மாவட்ட அரசு மருத்துவமனைகளில் தனியார் மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதிக்கக் கூடாது.
14. மருத்துவம் தனியார் மயமாவதை தடுத்திட வேண்டும். அனைவருக்கும் தரமான இலவச மருத்துவ சேவையை அரசே வழங்கிட வேண்டும்.
15. தனியார் மயத்தை தடுப்பதோடு, எந்த முதுநிலை மருதுவப் படிப்பை படித்தாலும், நல்ல ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும். இதன் மூலம் ஒரு சில முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு மட்டும் ஏற்படும் படும் போட்டியை தடுக்க முடியும்.

தொடரும்

தொடர்புக்கு: 9940664343, 9444181955


# கனடா - இந்தியா மோதல்:

# மோடி அரசின் அயலுறவுக் கொள்கை தோல்வியா?



அருண் நெடுஞ்செழியன்





**கனடா குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவளியை சேர்ந்த சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கடந்த ஜூன் 18 ஆம் தேதி கனடாவில் உள்ள சீக்கிய குருத்வாராவுக்கு அருகே சுட்டுக் கொல்லப்பட்டார்.**

இந்தக் கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கனடா நாடாளுமன்றத்தில் அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமாக தெரிவித்தார். தற்போது சர்வதேச விவாதமாக மாறியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து கனடாவில் உள்ள இந்திய தூதரையும் கனடா வெளியேற்றியுள்ளது.

கனடாவின் இந்தக் குற்றச்சாட்டையும் தூதர் வெளியேற்றத்தையும் சற்றும் எதிர்பார்த்திராத இந்திய அரசு, கனடாவின் குற்றச்சாட்டை "உள்நோக்கமுடையது' என்றும் "ஆதாரமற்றது" எனவும் மறுத்தது. மேலும் கனடா தூதரை நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்ட இந்திய அரசு, கனடா செல்வதற்கான விசா சேவையையும் நிறுத்தி வைத்துள்ளது. அமெரிக்கா கனடா வாழ் சீக்கியரான குர்பத்வந்த் சிங் பன்னு என்பவரை காலிஸ்தான் பிரிவினைவாதி என அறிவித்து இந்தியாவில் உள்ள அவரது சொத்துக்களை தேசிய புலனாய்வு அமைப்பு(NIA) முடக்கியுள்ளது.

முன்னதாக "நிஜார் கொலையில் இந்திய அரசு முகவர்களுக்கு உள்ள தொடர்பு குறித்த ஆதாரங்களை இந்திய அரசுடன் பல வாரங்களுக்கு முன்னதாகவே பகிர்ந்து கொண்டோம். திங்கள்கிழமை வெளிப்படையாக இந்திய அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டை நான் முன்வைத்தேன். ஆனால் ஆதாரங்களை பல வாரங்களுக்கு முன்னரே இந்தியாவிடம் பகிர்ந்துவிட்டோம். இந்தியாவுடன் இப்பிரச்சினையில் ஆக்கபூர்வமாக செயல்படவே விரும்புகிறோம். அவர்களும் எங்களுடன் ஒத்துழைப்பார்கள் என நம்புகிறோம். அப்போதுதான் இவ்விஷயத்தின் அடிஆழத்தை அறிய முடியும்" என இந்திய அரசின் கருத்திற்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மறுப்பு தெரிவித்துள்ளார்.

கனடாவின் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருப்பதாகவும், ஐந்து கண் என்று கூறப்படுகிற ஐந்து நாடுகளுக்கு இடையிலான கமுக்க உளவுப் பிரிவு வழங்கிய ஆதாரத்தின் அடிப்படையிலே கனடா பிரதமர் பேசுகிறார் என கனடா நாட்டிற்கான அமெரிக்கத் தூதர் டேவிட் கொஹேன் கூறுகிறார். இந்தியா மீதான கனடா பிரதமரின் குற்றச்சாட்டு கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் என்றும், இந்தக் கொலைக்கான விசாரணையில் இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கன் கூறியுள்ளார்.

"இந்தியாவுடனான உறவு முக்கியம் அதேநேரம் எங்கள் நாட்டுச் சட்டத்தையும் குடிமக்களையும் பாதுகாப்பது முக்கியம்" என கனடா பாதுகாப்புத் துறை அமைச்சர் பில் பிளேர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் முக்கிய ராஜ்ஜிய கூட்டாளியான இந்தியாவை ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை மூலமாக கனடாவும் அமெரிக்காவும் சுற்றிவளைப்பது தற்போது வெளிப்படையாக தெரியவருகிற நிலையில், இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் பாஜக மோடி அரசின் இந்துத்துவ நிலைப்பாட்டின் மோசமான எதிர்விளைவாகவும் இந்தப் பிரச்சனையை காண வேண்டியுள்ளது.

## ஒரு கொலையும், இரு நாடுகளின் மோதலும்

கடந்த ஜூன் 18ஆம் தேதி கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜாரை தேடப்படும் தீவிரவாதியென கடந்த 2020 ஆம் ஆண்டில் இந்திய அரசு அறிவித்துள்ளது. தனி காலிஸ்தான் நாடு கோரிக்கைக்காக செயல்படுகிற காலிஸ்தான் புலிப்படையின் தலைவராக, கொல்லப்பட்ட நிஜ்ஜார் செயல்பட்டு வந்ததாக இந்தியா தெரிவித்து வந்தது. கனடா அரசானது, காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு புகலிடமாகத் திகழ்வதாகவும், தீவிரவாதிகளிடம் கடுமை காட்ட வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்திவந்தது.

காலிஸ்தான் தனி நாடு கோரிக்கையாளர்களை கடுமையாக ஒடுக்கவேண்டும் என கனடா பிரதமருக்கு இந்தியா நெருக்கடி கொடுத்து வரும் அதேநேரத்தில்,நாட்டின் இறையாண்மையை காப்பாற்றுவது என்ற அடிப்படையில் கனடாவில் இந்தியாவின் தலையீட்டை ஏற்றுக்கொள்ள ஜஸ்டின் ட்ரூடோ அரசு மறுத்தது. காலிஸ்தான் ஆதரவு போராட்டங்களுக்கு கருத்து சுதந்திரம், அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி என்ற அடிப்படையில் கனடா ஆதரித்தது.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற ஜி 20 உச்சிமாநாட்டில் பங்கேற்க வந்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு அளித்த இரவு விருந்தில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவரிடம் காலிஸ்தான் பிரச்சனையை குறித்த பத்திரிக்கையாளர் கேள்விக்கு பதிலளித்த ட்ரூடோ "சிலரின் செயல்பாடுகளை (காலிஸ்தான் ஆதரவாளர்கள்) ஒட்டுமொத்த சமூகத்தின் கருத்தாகவோ கனடாவின் கருத்தாகவோ பார்க்கக் கூடாது. அதேநேரத்தில் சட்டத்தை மதிக்கவேண்டும் என்பதிலும் வேறு நாட்டின் தலையீடுகள் குறித்தும் நாங்கள் அக்கறை கொள்கிறோம்" என்றார்.

மாநாட்டில் பங்கேற்றுவிட்டு நாடு திரும்ப வேண்டிய நிலையில் ட்ரூடோ பயணித்த விமானத்தில் தொழிநுட்ப கோளாறு ஏற்பட, அவரது பயணம் இரண்டு நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இடையில் ஏர் இந்தியா விமானத்தை வழங்க இந்திய அரசு முன்வந்ததாகவும் அதை கனடா மறுத்ததாகவும் செய்திகள் வெளியாயின. இரண்டு நாட்களும் தங்கியிருந்த ஹோட்டல் அறையை விட்டு வெளியே வராத பிரதமர், பின்னர் லண்டனில் இருந்து வந்த மாற்று விமானத்தில் நாடு திரும்பினார்.

இந்நிலையில், ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலை, அதையொட்டி ஜி20 மாநாட்டில் கனடா பிரதமரின் கடுகடுப்பு அதைத்தொடர்ந்து, கனடா நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக இந்தியாவை சாடியது என முட்டல் மோதல் வளர்ந்து, இன்று இரு நாட்டு நல்லுறவிலும் பெரும் விரிசல் உண்டாகிவிட்டது. குறிப்பாக, கடந்த செப்டம்பர் 21 ஆம் தேதி முதல் கனடாவிற்கு விசா வழங்குவதை இந்திய அரசு நிறுத்தி வைத்துள்ளதால் கனடாவிற்கு படிக்கச் செல்கிற இந்திய மாணவர்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் சொந்த பந்தங்களை காணச் செல்லும் குடும்பத்தினர் பெரிய நெருக்கடிக்கும் குழப்பத்திற்கும் உள்ளாகி இருக்கின்றனர். குறிப்பாக கனடா வாழ் பஞ்சாபியர்கள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

## கனடா வாழ் சீக்கியர்களும் கனடாவின் உள்நாட்டு அரசியலும்

சீனா, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு அடுத்து இந்தியர்களே அதிக அளவில் கனடாவுக்கு புலம்பெயர்ந்திருப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 2021ஆம் ஆண்டின் கனடா நாட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழர்களுக்கு அடுத்து பஞ்சாபியர்களே கனடாவில் அதிகம் வசிக்கின்றனர். சீக்கியர்களின் இந்தப் புலப்பெயர்வு நிகழ்வானது 1947ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட மத அடிப்படைவாத மோதல்களில் இருந்து தப்பிப் பிழைப்பதில் தொடங்கியது எனலாம். பிரிவினையின் போது பஞ்சாபிய சீக்கியர்கள் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் குடியேறினாலும் அதிகளவில் கனடாவிற்கு செல்வதையே தேர்ந்தெடுத்தனர். அந்நாட்டில் நிலவிய அரசியல் பொருளாதார சூழல் மற்றும் சமூக, மத சுதந்திரம் போன்றவை அதிகளவிலான பஞ்சாபியர்களை கனடாவிற்கு ஈர்த்தது.

இவ்வாறு கனடாவிற்கு புலம்பெயர்ந்து சென்ற சீக்கியர்கள், இன்று கனடாவின் அரசியலில் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர். 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பின்னடவை சந்தித்த ட்ரூடோ, மீண்டும் பிரதமராக வருவதற்கு புதிய ஜனநாயகக் கட்சியின் (என்டிபி) தலைவர் ஜக்மீத் சிங்கின் ஆதரவே முக்கிய காரணமாக உள்ளது. 2019 தேர்தலில் ஜக்மீத் சிங் தலைமையிலான புதிய ஜனநாயகக் கட்சி, 24 இடங்களைப் பெற்று ட்ரூடோ பிரதமராக உதவியது. தற்போதைய கனேடிய பிரதமர் கட்சியின் கூட்டணிக் கட்சியான என்டிபியின் தலைவர் ஜக்மீத் சிங், இந்தியாவில் சீக்கியர்கள் மீதான தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிப்பவர். இவர் கட்சித் தலைவராவதற்கு முன்பு காலிஸ்தான் ஆதரவு பேரணிகளில் கலந்துகொள்வார் என்று கூறப்படுகிறது. இதனாலேயே ஜக்மீத் சிங் இந்தியா வருவதற்கு பலமுறை விசா மறுக்கப்பட்டது.

இந்நிலையில், ஆட்சியைத் தொடருவதற்கும், வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று மூன்றாம் முறையாக மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கும் கனடா வாழ் சீக்கியர்களின் ஆதரவும் அரவணைப்பும் ஜஸ்டின் ட்ரூடோவுக்குத் தேவைப்படுகிறது. தனது வாக்கு வங்கி அரசியலை தக்கவைத்துக் கொள்வதற்கே காலிஸ்தான் பிரச்சனையில் ட்ரூடோ மென்மையாக் நடந்துகொள்வதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காலிஸ்தான் கோரிக்கையும் இந்துத்துவ அரசியலும்

கனடா வாழ் சீக்கியர்களில் ஐந்து சதவீத மக்கள்தான் காலிஸ்தான் கோரிக்கை







தொடர்ச்சி 10ஆம் பக்கம்



வ.மணிமாறன்

# மாற்றத்தை மறுக்கு
# ஆன்மீக மறுமலர்ச்சிக்

**சாதி, தீண்டாமை, சமத்துவமின்மை, பெண்ணடிமை நிலவும் வரை தற்போதுள்ள இந்து மதத்தில் ஆன்மீக மறுமலர்ச்சியோ ஆன்மீக ஜனநாயகமோ ஒரு போதும் ஏற்படாது. இதற்கு சனாதனிகளே தடையாக இருந்து வருகின்றனர்.**

சென்னை காமராஜர் அரங்கத்தில் செப்டம்பர் 2ஆம் தேதி தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் சனாதன ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. இதில் பேசிய விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "சனாதனத்தை எதிர்ப்பதை விட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். சனாதனம் என்றால் என்ன? சனாதனம் என்கிற பெயரே சமஸ்கிருதத்தில் இருந்து வந்ததுதான். சனாதனம் சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரானது. சனாதனம் என்பதன் அர்த்தம் என்ன? நிலையானது, அதாவது மாற்ற முடியாதது. யாரும் கேள்வி கேட்க முடியாது என்பதுதான் சனாதனத்திற்குரிய அர்த்தம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும். எதுவுமே நிலையானது கிடையாது. எல்லாவற்றையும் நாம் கேள்வி கேட்க வேண்டும்" என்று பேசினார்.

### சனாதன கோட்பாடு

உதயநிதி ஸ்டாலின் பேச்சுக்கு இந்துத்துவ வாதிகளிடம் கடும் எதிர்ப்பு எழுந்த போதும், "நான் பேசியதில் உறுதியாக இருக்கிறேன். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த இந்தியாவே சனாதனம் குறித்து பேசிக்கொண்டு இருக்கிறது. இன்னமும் பேச வேண்டும். இனப்படுகொலை (Genocide) என்று பேசியதாக சிலர் சொல்கின்றனர். சனாதனம் என்ற கோட்பாட்டை ஒழிக்க வேண்டும் என்றுதான் பேசினேன். இனிமேலும் அப்படித்தான் பேசுவேன்" என்று உதயநிதி உறுதி தெரிவித்தார்.

சனாதனம் பற்றி தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி ஏற்கனவே பேசித் திரிகிறார். மணிப்பூர் மாநிலமே பற்றி எரிந்தது; வன்முறையால் அந்த மாநில மக்கள் திக்குத் தெரியாமல் ஒடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கூட வாய் திறந்து பேசாத பிரதமர் மோடி, சனாதனம் பற்றிப் பேசினார். ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ் நாத் சிங் ஆகியோரும் பேசினர். தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை செல்லும் இடமெல்லாம் சனாதனம் பற்றி திருவாய் மலர்ந்தருளினார்.

"சனாதனத்தின் உண்மையான அர்த்தம் என்னவென்றால் முதலும் முடிவும் இல்லாமல் எல்லா காலமும் இருக்கக் கூடிய தர்மம், சனாதன தர்மம். இது எப்போது பிறந்தது என்று யாருக்கும் தெரியாது; எப்போது முடியுமென்று யாருக்கும் தெரியாது. கடந்த 20 ஆயிரம் ஆண்டுகளாக இருக்கிறது" (2023 செப்டம்பர் 10) என்று தென்காசியில் அண்ணாமலை பேசினார்.

சனாதனம் பற்றிய இந்த விவாதம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில் நடைபெற்றுள்ளது.



### சீர்திருத்தங்களை எதிர்க்கும் சனாதனிகள்

வங்காளத்தில் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சனாதனம் பற்றி பெரும் விவாதம் நடைபெற்றுள்ளது. உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம் ஆகியவற்றை ஒழிப்பதற்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சனாதனிகள், "இந்த சீர்திருத்தங்கள் அனைத்தும் சமூகத்தை மாசுபடுத்தும்" என்றனர்.

இதேபோன்று மகாராஷ்டிராவில் ஜோதிராவ்பூலே சீர்திருத்தக் குரலை ஓங்கி ஒலித்த போது, சனாதனிகள் கடுமையாக எதிர்த்தனர். தமிழ்நாட்டில் வைதீக மதத்தை வள்ளலார் எதிர்த்த போது, சனாதனிகள் கடும் சண்டையில் இறங்கினர்.

**"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம்**
**முதலா நவின்ற கலைச் சரிதம்**
**எலாம் பிள்ளை விளையாட்டே**
**மேல்வருணம் தோல் வருணம்**
**கண்டறிவார் இலைநீ"**

என்று சாடினார் வள்ளலார்.

தன்னை சனாதனி என அறிவித்து கொண்ட மகாத்மா காந்தி, தீண்டாமைக்கு எதிராகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில் நுழைவுப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு ஆதரவாகவும் பேசத் தொடங்கினார்.

இதனால் ஆத்திரமடைந்த சனாதனிகள், நாடு முழுவதும் சனாதன தர்ம மகா சபைகளை தொடங்கினர். தீண்டாமைக்கு எதிராகவும், தலித்துகளின் கோயில் நுழைவு உரிமையையும் காந்தியார் வலியுறுத்திய போது, மதன் மோகன் மாளவியா கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். காந்தியாரின் முடிவுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபடுமாறு மதன் மோகன் மாளவியா அழைப்பு விடுத்தார். (1933 ஜனவரி 23) இந்த மதன் மோகன் மாளவியாவைத்தான் இன்றைய பாஜக போற்றிப் பாடுகிறது. காந்தியார் வலியுறுத்தி வந்த சீர்திருத்தங்களால், வெறுப்படைந்த சனாதனிகள் அவரது உயிரையே பறித்து விட்டனர்.

தமிழ்நாட்டில் தீண்டாமை, குலக்கல்வி, குழந்தை திருமணம், மருத்துவப் படிப்பில் சேர சமஸ்கிருதம் கட்டாயம் போன்றவற்றை எதிர்த்தும், அனைவருக்கும் கல்வி, விதவை திருமணம் போன்றவற்றை ஆதரித்தும் சீர்திருத்தக் குரல்கள் ஒலித்தன. ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்ற சனாதனவாதிகள் கண்டனம் தெரிவித்ததுடன், சீர்திருத்தங்களை ஏற்க மறுத்தனர்.

சாதி ஒழிப்பு; சமத்துவம் ஏற்பட எழுதியும் பேசியும் போராடியும் வந்த அம்பேத்கரை பெரியார் ஆதரித்தார். அன்றைக்கு பெரியாருக்கு எதிராக இருந்த ராஜாஜி அம்பேத்கரை ஆதரிக்கவில்லை. ஆனால், குலக்கல்வி திட்டத்தை கொண்டுவர முயன்றார்.

சனாதனம் நித்தியமானது; நிலையானது; மாறாதது என்று பேசும் சனாதனிகள் ஒருபுறமும் சாதி, தீண்டாமை, சமத்துவமின்மை; பெண்ணடிமை போன்றவற்றுக்கு எதிரான குரல்கள் மறுபுறமுமாக இருந்து வருகின்றன. இதுதான் வரலாறு.

### சனாதன தர்மத்தின் காலம்

இந்த சனாதன தர்மத்தின் காலத்தை கணிக்க முடியாது; 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்பதெல்லாம் ஆதாரமற்ற வெற்று சலம்பல்கள். சனாதனத்துக்கு அளிக்கப்படும் விளக்கங்கள், மரபுகள் அனைத்தும் 1500 ஆண்டுகளுக்கு உட்பட்டவை. இதனை வரலாற்று ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

1, சனாதன தர்மம்

2, வர்ண தர்மம்

3, ஸ்வய தர்மம்

இப்படி வகைப்படுத்தும் தர்மங்கள் தனிமனிதன், சமூகக் குழு, சமூகம் ஆகியவற்றுக்கான இயல்பு அல்லது கடமைகளை, உரிமைகளை வரையறுக்கின்றன. இது குறித்து வெவ்வேறு நூல்கள் வெவ்வேறு பட்டியலைத் தருகின்றன. ஆனால் அனைத்தும் படிநிலை சாதிய அமைப்பு, தீண்டாமை, சமத்துவமின்மை, பெண்ணடிமை ஆகியவற்றில் ஒன்றுபடுகின்றன.

சனாதனம் குறித்து திருவாளர் அண்ணாமலை அளித்திருக்கும் விளக்கங்களே இதற்கு சான்றாகும்.

### சனாதனத்தின் பெயரால் அநீதி

"திருப்பாணாழ்வார் கோயிலுக்கு சென்றால் அங்குள்ள நந்தியின் சிலை சற்று விலகி இருக்கும். ஏன் இப்படி விலகி இருக்கிறது? ஒரு கீழ் சாதியை (அண்ணாமலை கூறிய வார்த்தை) சேர்ந்த மனிதர் சிவனை பார்ப்பதற்காக வந்திருக்கிறார். அவரது கீழ் சாதியை காரணம் காட்டி அவருக்கு அங்கிருந்தவர்கள் அனுமதி மறுத்துள்ளனர். இதை பார்த்துக் கொண்டிருந்த சிவனின் நந்தி, தான் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து சற்று விலகி, அந்த மனிதர் சிவனைப் பார்க்க அனுமதித்தது. இதுதான் சனாதன தர்மம்" (2023 செப்டம்பர் 10, மதுரை) இது அண்ணாமலை கூறியது.

நந்தி விலகியதையும் சிவன் காட்சியளித்ததையும் எடுத்துக் கூறி அண்ணாமலை புல்லரிக்கிறார். இங்கு பிரச்சனையே சமூகத்தின் ஒரு பகுதியினரை கீழ் சாதி என்று கூறி கோயிலுக்குள் நுழைய விடாமல் தடுத்ததும்; அவர்களின்





# ம் சனாதனம் தும் எதிரானது

வழிபாட்டு உரிமையை பறித்ததும்தான். இந்த அநீதி சனாதன தர்மத்தின் பெயரால் அரங்கேற்றப்படுகிறது.

“தற்போது மங்கை அம்மாளுக்கு பூசை செய்தவர் 225வது தலைமுறை. நான் இப்போது போய் அனைவரும் சமம் என்று கூறி, அந்த பூசையை நான் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா..? அது அவருடைய கடமை, அவர்தான் செய்ய முடியும். அதேபோல், அவரை அழைத்து வந்து நான் செய்யக்கூடிய விவசாயத்தை செய் என்று சொல்ல முடியாது. என் வேலையை நான் செய்கிறேன், அவர் வேலையை அவர் செய்கிறார்” (2023 செப்டம்பர் 6)

“உனக்கு கொடுக்கப்பட்ட வேலையை உனது சமூகத்துக்கு கொடுக்கப்பட்ட வேலையை உனது சாதிக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும் என்பதுதான் சனாதன தர்மம்“ (2022 ஏப்ரல் 24) இவை எல்லாம் அண்ணாமலையின் கூற்றுகள்.

அவர் இங்கு குறிப்பிடுவது குலத்தொழிலை அதாவது அந்தந்த சாதிக்குரிய கடமையை, தொழிலை செய்ய வேண்டும் என்பதைத்தான் அண்ணாமலை கூறுகிறார்.

### ஆன்மீக மறுமலர்ச்சி ஏற்படுமா?

சாதி, தீண்டாமை, சமத்துவமின்மை, பெண்ணடிமை நிலவும் வரை தற்போதுள்ள இந்து மதத்தில் இருந்து ஆன்மீக ஜனநாயகம், ஆன்மீக மறுமலர்ச்சி ஒரு போதும் ஏற்படாது. மக்களுடைய கடவுள் நம்பிக்கை, பக்தி மட்டும் இந்து மதத்தில் மாற்றத்தை கொண்டு வந்து விடாது.

சாதியை ஒழிப்பதற்கு; தீண்டாமையை அகற்றுவதற்கு; சமூக சமத்துவம் ஏற்படுவதற்கு பாஜக விரும்புகிறதா? அதற்காக போராட முன் வருகிறதா? இதனை சனாதனிகள் விரும்புகின்றனரா? போராட முன்வருகின்றனரா? என்பதில்தான் இந்து மதத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

### இந்திய சமூகம் குறித்து மார்க்ஸ்

இது தொடர்பாக காரல் மார்க்ஸ் நியூயார்க் டெய்லி டிரிப்யூன் இதழில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு:

“இந்த அமைதியான கிராமச் சமூகங்கள் மனித மூளையைச் சின்னஞ்சிறு கூட்டுக்குள் அடைத்து அதை மூடநம்பிக்கையின் சுலபமான கருவிகளாகவும், பரம்பரைச் சம்பிரதாய விதிகளின் அடிமையாகவும் ஆக்கியதையும், சகல வகைப்பட்ட சிறப்புக்களையும் சரித்திர பூர்வமான சக்திகளையும் மனித மூளை பெறமுடியாமல் செய்ததையும் நாம் மறக்க முடியாது.

இந்தச் சிறுசமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும், அடிமை முறையாலும் களங்கமடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானன் ஆக்குவதற்குப் பதிலாக, அவனைச் சுற்றுச் சார்புக்கு அடிமைப்படுத்தின. தானாக வளர்ந்துகொண்டிருந்த சமூக நிலையை, ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இந்தவிதமாக, இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலைமையைச் சிருஷ்டித்தது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன், குரங்காகிய அனுமான் முன்பும், பசுமாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில், இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றையும் நாம் மறக்கக் கூடாது.

அவை மனிதனது சிந்தையைக் குன்றிய வட்டத்தில் சுழலச் செய்து, அதனை மூடநம்பிக்கைக்கு ஏற்ற கருவியாகவும், மரபின் அடிமையாகவும் செய்து, அதன் மேன்மை முழுவதையும் வரலாற்றுப் படைப்பாற்றல் அனைத்தையும் இழக்கச் செய்துவிட்டன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

பேரரசுகளின் அழிவையும், சொல்வதற்கு முடியாத கொடுமைகள் நிகழ்ந்ததையும், பெரிய நகரங்களின் மக்கள் படுகொலைக்கு ஆளானதையும், ஏதோ இயற்கை நிகழ்ச்சிகளைக் காண்பது போல் பார்த்துக்கொண்டு வாளாவிருந்த இக்கிராமசமூகங்களது தன்னகங்காரத்தை இவ்வளவுக்குமிடையில் தத்தம் துண்டு துக்காணி நிலத்தின் சாகுபடி யிலேயே கண்ணும் கருத்துமாயிருந்த அவற்றின் செருக்கை நாம் மறக்கக் கூடாது. இவற்றின் மீது பார்வையைத் திருப்பிய எந்த ஆக்கிரமிப்பாளனுக்கும் இரையாகி வந்த இச்சமூகங்களின் அவல நிலையையும் நாம் மறக்கலாகாது. மாண்புக்கும் முன்னேற்றத்துக்கும் இடமில்லாத இந்தத் தேக்கமான, செயலற்ற வாழ்க்கை, நேர்மாறான விளைவுகளை உண்டாக்கி, குறியோ நெறியோ இல்லாத அழிவுச் சக்திகளைத் தாண்டவமாடச் செய்து, நரபலியையே இந்துஸ்தானத்தின் (இந்தியாவின்) சமயச் சடங்காக ஆக்கியது என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேற்றுமையாலும் அடிமை முறையாலும் கெட்டிருந்தன என்பதையும், அவை மனிதனை புறநிலைமைகளுக்கு எஜமானனாக்குவதற்குப் பதிலாக அவற்றுக்கு அடிமைப்படுத்தின என்பதையும், தானே வளர்வதற்குரிய சமுதாய வாழ்வை அவை என்றும் மாறாத இயற்கை விதியாக மாற்றின என்பதையும், இவ்வாறாக மிருகத்தனத்தை வளர்த்திடும் படியான முறையில் இயற்கைக்கு அடிபணிந்து அதனை வழிபடும் நிலையை உண்டாக்கின என்பதையும், இயற்கையை ஆட்சி புரியவேண்டிய அதிபனாகிய மனிதன், குரங்காகிய அனுமானுக்கும் பசுவாகிய சபலைக்கும் தண்டனிட்டு அஞ்சலி செலுத்த நேர்ந்ததில் இக்கிரமாச் சமுதாயங்களின் இழிநிலை புலனாகிறது...

...ஆசியாவின் சமூக நிலையில் அடிப்படையான புரட்சி ஏற்படாமல், மனிதகுலம் தன் லட்சியத்தில் நிறைவு எய்துமா என்பதே கேள்வி. (1853 ஜூன் 25, நியூயார்க் டெய்லி டிரிப்யூன்)

தொடர்புக்கு: 9500001224



# இந்தியா பிரிட்டிஷ் சூட்டிய பெயரா?

**ஆளும் ஒன்றிய பிஜேபி ஆட்சி, இந்தியா என்ற நமது நாட்டின் பெயரை மாற்றி “பாரத்” என பெயர் சூட்ட முயன்றுள்ளது.**



மு.வீரபாண்டியன்

“இந்தியா எனும் பெயர் ஆங்கிலேயர் சூட்டிய பெயர். எனவே இதனை மாற்றி புராதான பெயரும் இதிகாச பெயருமான பாரத் (பரதன்) என பெயர் குறிப்பிட்டுள்ளோம்” என விளக்கம் கூறப்படுகிறது.

உலகில் சிறிய நாடு துவங்கி, பெரிய நாடு வரை தங்கள் பெயர்களை மாற்றி உள்ளதை அறிவோம்.

இந்தியாவை பொருத்தவரை இது குறித்து விவாதிக்க வேண்டிய இடம் நாடாளுமன்றம் அல்லவா? நாடாளுமன்றம் அறியாமல், எதிர்கட்சிகளுக்கு தெரியாமல், பிரதமர் ஜி 20 மாநாட்டில் இந்தியாவின் பெயரை பாரத் என்கிறார்.

இது அதிர்ச்சி மட்டுமல்ல, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதான தாக்குதலும் கூட. பாரத் என்ற சொல் இந்திய அரசியல் சாசனத்திலும் இடம் பெற்றுள்ளது.

1947 சட்டப்படி பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கும் சட்டத்தை (INDIAN INDEPENDENCE ACT) சட்ட வடிவில் முன் மொழிந்தனர். ஆனால் அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே கிழக்கிந்திய கம்பெனிகள் இந்திய பெயரில்தான் இயங்கின.

கி.மு.5–ம் நூற்றாண்டிலேயே கிரேக்க ஹெரேட்டஸ், சிந்து நதிக்கு அப்பால் உள்ள பகுதிகளை, இந்தியா என்றே அழைத்தனர்.

ஈரானின் டேரியஸ், 5,6–ம் நூற்றாண்டில் இந்தியா வின் சில பகுதிகளை வெற்றி கொண்டதின் கல்வெட்டுகளை ஈரானில் நிறுவியதற்கு சான்றுகள் உள்ளன.

அதற்கு முன்னர் 4–ம் நூற்றாண்டில் மெகஸ்தனிஸ் “இண்டிகா” எனும் (INDICA)நூலில் இந்தியக் கலாசாரங்களை வியந்துள்ளார். இன்னும் பலர் குறிப்பாக சீன யாத்திரீகர்கள், இந்தியாவை இந்து நாடு என்றே அழைத்தனர்.

பாரத் – அக்பர் – இந்துஸ்தான் என அழைத்தனர்.பல்வேறு பெயர்களில் இந்தியா அழைக்கப்பட்டாலும், புராணத்தை ஏற்பவர்கள் பரத கண்டம் என அழைத்தனர்.

நிறைவில் ‘இந்தியா’ எப்படி வழங்கலாயிற்று, எப்படி நிலைபெற்றது?


நேரு மற்றும் இன்னும் பல வரலாற்று ஆய்வாளர்கள் கூற்றுப்படி, சிந்து நதியிலிருந்து ஹிந், ஹிந்து, சிந்தியா – இந்தியா என மறுவிய சொல் இந்தியா என்கின்றனர்.

எனவே பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னரே “இந்தியா” புழங்கியது. உலகம் முழுவதும் பேசப்பட்டது.

எனவே இந்தியா எனும் பெயர் பிரிட்டிஷ் சூட்டியது அல்ல. வரலாற்றை மத கண்களால் பார்ப்பதால் பிஜேபி மீண்டும் வரலாற்றின் மீது அவதூறுகள் செய்கிறது.

இந்தியாவின் புராதன கதைகளும் – காவியங்களும் பிரமிப்பானவை, கற்பனை வளம் மிக்கவை. நாம் அவற்றை மதிக்கிறோம்.

அதற்காக புராதன காலத்திற்கும் நாடு செல்ல வேண்டுமா? வரலாற்று சக்கரத்தை பின்னோக்கி தள்ள வேண்டுமா?




அழகிய பெண்ணின் கால்பட்டாலே “அசோக மரம்” பூத்துவிடும் என்ற புராதன, இதிகாச கதைகள் உண்டு.

மன்மதன், ரதிதேவி துணையுடன், கரும்பு வில்லால், சிவன் மீது அம்பெய்த, அவரது கண்களிலிருந்து நெருப்பு கிளம்பியது என்ற கதைகளும் உண்டு.

இதனை புராதன காலக்கதை என மதிக்கலாம். கற்பனை வளம் கண்டு ரசிக்கலாம். ஆனால் இன்றைய அறிவியல் நுட்ப யுகத்தில் ஏற்க இயலுமா?

மொழிகள் – இனங்கள், மதங்கள், சாதிகள், பூகோள தட்ப வெப்ப சூழல்கள் என வியப்பூட்டும் நாடு இது. இந்த நாட்டிற்கு ஒரு மொழி பெயர் ஏற்புடையதாகுமா?

மதத்தின் பெயரோ? இதிகாச, வேதகால பெயரோ ஏற்புடைமை ஆகுமா?

அழகான சிந்து நதியின் பெயர். அது கொடுத்த இந்தியா எனும் பெயர். உலகம் முழுவதும் பரவி நிலைபெற்ற பின் பாரத் ஏன்?

எதிர்கட்சிகள் “இந்தியா” எனும் பெயரில் ஓர் வெற்றி கூட்டணி கண்டதுதான் பெயர் மாற்ற பிண்ணனியா? அல்லது மத இதிகாசங்களுக்கான இடைக்கால ஏற்பாடா?

பதில் நாடாளுமன்ற தேர்தல் தான்!!

முதுநிலை மருத்துவப் படிப்பு

# ஒன்றிய அரசின் வஞ்சக செயலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

முதுநிலை மருத்துவப் படிப்பு ஒன்றிய அரசின் வஞ்சக செயலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு நடந்து கொண்டிருக்கும் நிலையில், முதுநிலை மருத்துவப் படிப்பில் சேருவதற்கு 'நீட்' தேர்வு மதிப்பெண் அடிப்படையாக இருக்காது. அது 'பூஜ்யமாக' கருதப்படும் என்று மத்திய மருத்துவக் கலந்தாய்வுக் குழு அறிவித்துள்ளது.

இதனால் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் முதுநிலை மற்றும் பட்டயப்படிப்பு பயில 'நீட்' மதிப்பெண் அவசியமில்லை என்பதை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஒன்றிய அரசின் 'தகுதி' மற்றும் பொது நுழைவுத் தேர்வு கொள்கை படுதோல்வி அடைந்துள்ளது.

இளநிலை மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கைக்கு 'நீட்' தேர்வு மதிப்பெண் கட்டாயம் என நிர்பந்தப்படுத்தி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சாதியினர், பழங்குடியினர் சமூக பிரிவுகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. மழைக்கால புற்றீசல்கள் போல் தோன்றியுள்ள 'நீட்' பயிற்சி மையங்கள் மூலம் பணம் பறிக்கும் சமூக விரோத கொள்ளைக்கு ஆதரவு காட்டி வரும் பாஜக ஒன்றிய அரசு 'தகுதி', 'திறன்' என்ற பெயரில் அடித்தட்டு மக்களுக்கு சமூக அநீதி இழைத்து வருகிறது. இந்த சமூக அநீதிகளையப்பட 'நீட்' தேர்வில் இருந்து 'விதி விலக்கு' கேட்டு தமிழ்நாடு முனைப்புடன் போராடி வருகிறது.

இந்த நிலையில் இளநிலை மருத்துவப் படிப்பில் நீட் தேர்வு மூலம் வடிகட்டி, அடித்தட்டு மக்களின் மருத்துவக் கல்வி உரிமையை மறுத்து விட்டு, முதுநிலை படிப்பில் உயர் சாதி பிரிவினர் தடையின்றி நுழைய கதவு திறந்து விடும் வஞ்சக செயலாகவே ஒன்றிய அரசின் செயல் அமைந்திருக்கிறது. ஒன்றிய அரசின் இந்த பாரபட்ச செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன், 'நீட்' தேர்வு முறையை முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டும், குறைந்தபட்சம் தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது என தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

செவிலியர்கள் கோரிக்கைகளை ஏற்று

# உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள செய்தி அறிக்கை.

செவிலியர்கள் கோரிக்கைகளை ஏற்று உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்த தமிழ்நாடு அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நன்றி தெரிவித்துள்ளது.

கோவிட் 19 காலத்தில் பணிபுரிந்த செவிலியர்கள் மீண்டும் தங்களை பணியில் அமர்த்தவும், பணியை நிரந்தரப்படுத்தவும் வலியுறுத்தி தொடர்ச்சியாக கால வரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 26.09.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தையில் ஒரு உயர்மட்ட குழு அமைத்து கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்ற அரசின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. போராடிய செவிலியர்கள் தங்கள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டுள்ளனர். போராடிய செவிலியர்களின் உணர்வை புரிந்து கொண்டு பிரச்சனையை தீர்ப்பதற்கு முன்வந்த தமிழ்நாடு அரசிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழுவின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

குறித்து அக்கறை கொண்டிருப்பதாகவும், மீதமுள்ளவர்கள் தங்களது வாழ்க்கையை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் கனடாவின் முன்னாள் அயலுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியிருப்பது கவனத்தில் கொள்ளவேண்டிய கருத்தாகும். இந்தியாவோ ஏதோ ஒட்டுமொத்த கனடா வாழ் சீக்கியர்களும் காலிஸ்தான் தனி நாடு கோரிக்கைக்காக கொடி பிடிப்பதாக கனடாவுக்கு நெருக்கடி கொடுத்த வருகிறது.

மோடி அரசின் இரண்டாம் சுற்று ஆட்சியில் வெளியுறவுத்துறை அமைச்சராக ஜெய்சங்கர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களை நாம் கவனித்தால், அதில் இந்துத்துத்துவ வாதிகளின் போலி தேசியப் பெருமித நலன்களும் மத அடிப்படைவாத நலன்களும் பெருமுதலாளிகளின் நலன்களும் ஒன்று கலந்திருப்பதை கவனிக்கலாம். பாகிஸ்தான் பங்களாதேஷ் போன்ற சிறிய அண்டை நாடுகளிடம் வேகம் காட்டுகிற இந்தியா, சீனாவின் எல்லைப்பகுதி அத்துமீறல் மற்றும் அருணாச்சல பிரதேச விவகாரங்களில் அடக்கி வாசிப்பதையும் காண முடிகிறது.

அண்மையில் சீன எல்லை விவகாரத்தில், ஒன்றிய அரசின் அணுகுமுறை குறித்து பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் ''சீன பொருளாதாரம் மிகப் பெரியது. நமது பொருளாதாரம் மிகச் சிறியது. அப்படி இருக்கும்போது சீனாவுடன் போர் புரிவதை நாம் தேர்ந்தெடுக்க முடியாது'' என தெரிவித்திருந்தார். இவரது இந்தக் கூற்றை விமர்சித்த காங்கிரஸ் கட்சி "வெளியுறவு அமைச்சராக ஜெய்சங்கர் தோல்வி அடைந்துவிட்டார்" என்றது.

"மோடியை சந்திப்பதற்கு முன்பாகவே நான் தனிப்பட்ட முறையில் மோடியை விரும்பினேன்" என மோடி துதி பாடுகிற அமைச்சர் ஜெய்சங்கர், இந்துத்துவவாதிகளின் செல்லப்பிள்ளையாகவே செயல்படுகிறார். அண்மையில், பாரத் என்ற பெயர் மாற்ற பிரச்சனையில், அரசியல் சாசனத்தை அனைவரும் படிக்க வேண்டும் என மோடி அரசுக்கு முரட்டுத்தனமாக முட்டுக் கொடுத்தவர் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

நாடுகளுக்கு இடையிலான அரசியல் பொருளாதார முரண்பாடுகளை கையாள்வதில், இந்துத்துவ வாதிகளின் போலி தேசியப் பெருமிதங்களையும் இந்துத்துவ அடிப்படைவாத சிந்தனையையும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஒன்று கலப்பது ஆபத்தான போக்காகும். உலக அரங்கில் அமெரிக்காவின் செல்வாக்கு சரியத் தொடங்கிய பின்னர் "குளோபல் சவுத்" என்ற முழக்கத்தின் கீழ் ஆசிய நாடுகளின் பெரியண்ணனாக தன்னை நிலைநிறுத்த துடிக்கிற மோடி அரசை, கனடாவின் குற்றச்சாட்டுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் அமெரிக்கா கட்டுப்படுத்துவதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மொத்தத்தில் ஆளும்வர்க்கங்களுக்கு இடையிலான அரசியல் மத அடிப்படையிலான முரண்பாடுகள், கனடா இந்தியா முரண்பாடுகளை பூதாகரமாக்கி மக்களை குழப்பி நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருப்பது தெளிவாகிறது.

தொடர்புக்கு : 9842391963

# நாடாளுமன்ற நடைமுறைகள் மீறல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



நாடாளுமன்ற நடைமுறைகள் மீறல் குறித்து மாநிலங்களவைத் தலைவர் ஜகதீப் தங்கருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுச் செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி கடிதம்:

2023 செப்டம்பர் 18ம் நாளில் வரலாற்றுப் புகழ் பெற்ற நாடாளுமன்ற பழைய கட்டடத்துக்குப் பிரியா விடை கூற நாம் அனைவரும் கூடினோம். அந்தப் பெருமைமிகு மாளிகையில் நமது ஜனநாயகப் பயணத்தின் 75 ஆண்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள நாள் முழுதும் மிகச் சரியாகவே ஒதுக்கினோம். நாடு தற்போது சமூக அரசியல் பிரச்சனைகளையும் இந்திய நாடாளுமன்றப் பயணத்தையும் பிரதிபலித்து உறுப்பினர்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். ஆனால் மிக மிக துரதிருஷ்டவசமாக, விவாதங்களில் பங்கேற்கும் வாய்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தாங்கள் அளிக்க மறுத்தீர்கள். அதற்கான காரணங்கள் உங்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கும்.

தகுந்த நேரத்தில் எங்கள் கட்சி விவாதத்தில் பங்கேற்கப் பெயர்களைக் கொடுத்தது; இந்த முக்கியமான விவாதத்தில் பேசுபவர்களின் பட்டியலில் எங்களது பெயர்களையும் உங்களது செயலகம் பட்டியலிட்டது. வரலாற்றுப் புகழ்மிக்க பழைய நாடாளுமன்ற கட்டடத்தில் இறுதி நாள் நிகழ்வுகளில் 20 வேறுபட்ட கட்சிகளிருந்து மொத்தம் 34 பேச்சாளர்கள் பங்களித்தனர். ஆனால், 2023 செப்டம்பர் 18ல் மாலை 5. 58க்கு திடீரென்று அவை ஒத்தி வைக்கப்பட்டபோது, இந்த வாய்ப்பில் சிபிஐ அனுமதிக்கப்படவில்லை. நான் நேரடியாக உங்களை அணுகியபோது, நீங்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உரையாற்ற அழைக்கப்படுமென எனக்கு உறுதியளித்தீர்கள். ஆனால் அந்த உறுதிமொழி பாழானது, காப்பாற்றப்படவில்லை; இதன் விளைவாய் இந்த முக்கியமான விவாதத்தில் சிபிஐ பங்கேற்க அனுமதிக்கப்படாத நிலை உருவானது. இந்த விடுபடலுக்கு எந்தக் காரணமும் அளிக்கப்படவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து நாட்டை விடுதலை செய்வதிலும், விடுதலை பெற்ற இந்தியாவின் முற்போக்கான திசைவழியில் தேசிய நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதிலும் மற்றும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலிமையாக்குவதிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பு அனைவரும் நன்கு அறிந்த ஒன்று. இந்திரஜித் குப்தா, பூபேஷ் குப்தா மற்றும் பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி போன்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் தலைவர்கள், மக்கள் பிரச்சனைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பியதன் மூலம் ஆற்றிய அளப்பரிய மதிப்புடைய பங்களிப்பை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் தங்கள் உரைகளில் நினைவு கூர்ந்தனர்.

அத்தகைய புகழ்மிக்க வரலாற்றுடன், எதிர்காலக் கண்ணோட்டம் மற்றும் சுதந்திரம் பெற்ற காலம் முதல் நாடாளுமன்றத்தில் துண்டிப்பு இல்லாத தொடர்ச்சியாகப் பங்கேற்று பங்களித்த ஒரு கட்சி, தனது அனுபவங்களை வெளிப்படுத்த பங்கேற்க அனுமதிக்கப்படாதது மிகவும் வருத்தத்திற்குரியது. துயர்மிகு எங்கள் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ளக் கோருவதுடன், எதிர்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் மீண்டும் நடைபெறக் கூடாது என்ற எதிர்பார்ப்பையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

# டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் கருத்தரங்கம்



டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 38,000 க்கும் மேற்பட்ட டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு உடனடியாக பணி பாதுகாப்பு வழங்க வேண்டும் .

தினக் கூலி என்பதற்குப் பதிலாக, மாத ஊதிய வழங்கிடவேண்டும். குறைந்த பட்ச மாத ஊதியமாக ரூ 21,000 வழங்கிட வேண்டும்.

பல ஊராட்சி ,நகராட்சி ,மாநகராட்சி உள்ளிட்ட அமைப்புகளில் பணிபுரியும் இந்த கொசு ஒழிப்பு ஊழியர்களுக்கு, சம வேலைக்கு சம ஊதியம. வழங்கிட வேண்டும். பணிநிரந்தரம் வழங்கிட வேண்டும். மேற்கண்ட இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ...

சென்னையில் ஆஷா நிவாஷ் அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் கே.ஜெயவேலு தலைமை தாங்கினார்.

செயலாளர் ஏ.சதீஷ் வரவேற்றார்.

வழக்கறிஞர் நடராஜன் கருத்தரங்கை தொடங்கிவைத்தார்.

கோரிக்கைகளை விளக்கி, மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி உரையாற்றினார்.

எம்.ஆர்.பி கோவிட் செவிலியர் சங்கத்தின் துணைத்தலைவர் ஜி.உதயக்குமார், ஆர்.சி.எச் தூய்மை பணியாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் நிலாஒளி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் நிறைவு உரையாற்றினார்.

இக் கருத்தரங்கில் 300 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# திராவிடம் எனும் சொல்லாடல்!



டி.ராமசாமி முன் எம்எல்ஏ

**திமுக ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி என்று அறிவித்துள்ளது. குஜராத் மாடல் என்று பா.ஜ.க சொன்னதுபோல, தமிழக மாடல் என்று சொல்லாமல் திராவிட மாடல் என்று சொல்கிறார்கள். குஜராத் மாடல் நாட்டை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வது. திராவிட மாடல் அப்படிப்பட்டதல்ல.**





நீதிக்கட்சி தொடங்கிய காலத்தில் மொழிவழி மாநிலம் இல்லை. வெள்ளையர் ஆட்சி மாகாணங்களை உருவாக்கியது. பல சமஸ்தானங்களும் இருந்தன. அந்த வகையில் இன்றைய தமிழ்நாடு உள்ளடக்கிய அன்றைய சென்னை மாகாணம் இருந்தது. சென்னை மாகாணத்தில் ஆந்திரா, கேரளா, கர்நாடகா பகுதிகளும் சில இருந்தது.

திராவிடம் என்ற சொல் இப்போது கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாக தமிழ் உள்ளது. இதிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியவை தோன்றின. இந்த மொழிக் குடும்பம் திராவிட மொழிகள் எனப்படுகின்றன. திராவிட மொழி என்று தனியாக ஒன்றோ அல்லது திராவிட தேசமோ இல்லை. ஆனால் திராவிடம் என்பது ஒரு கருத்தியலாக, அரசியல் சொல்லாடலாக இருக்கிறது. ஆரியம் என்பதன் எதிர்ச் சொல்லாகவே திராவிடம் உள்ளது.

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்கள் மொழிவழியாக பிரிக்கப்பட்டன. பெரியாருக்கு முன்பே திராவிடம் என்ற சொல் இருந்தது. ஆரியம் கற்பித்த மனிதநேயமற்ற அனைத்துக்கும் இது எதிராக முன்மொழியப்பட்டது. திராவிட கொள்கை, இந்தியாவிற்கே முன்மாதிரியாகவும் இருக்கிறது.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு மனிதனின் அடிப்படை தேவை. இவை சோசலிசத்தில் தான் அனைவருக்கும் உறுதி செய்யப்படும். சமத்துவம் பேணப்படும். அரசியல் சுதந்திரம் மட்டுமின்றி, சமூக, பொருளாதார சுதந்திரமும் அனைவருக்கும் கிடைக்கும். ஜனநாயகப்புரட்சி நடந்து அதன் வெற்றிக்கு பின்பு தான் சோசலிசப்புரட்சி என்று மாமேதை லெனின் நமக்கு வழிவகுத்து கொடுத்துள்ளார்.

திராவிட மாடல், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. சாதி ஒழிப்பு, சமூக நீதி, ஆதிக்க எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, ஜனநாயகம் அனைவருக்கும் கிடைத்திட வேண்டும் என வலியுறுத்துகிறது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் என்று தொடங்கி சாதி மறுப்பு திருமணங்களை ஊக்குவிப்பதின் மூலம் சாதி ஒழிப்பதற்கான நடவடிக்கை. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தில் தொடங்கி இட ஒதுக்கீடு கொள்கையை பேணி பாதுகாப்பது. இவற்றுக்கு நெருக்கடி வரும்போதெல்லாம் எதிர்த்து போராடுவது. தமிழ்மொழி காத்து வேற்றுமொழி திணிப்பு வரும்போது எல்லாம் எதிர்ப்பது. ஆண், பெண் சமத்துவத்தை பேணுகின்ற முறையில் பெண்களுக்கு சொத்தில் பங்கு, மகளிர் உரிமைத்தொகை ரூ 1000 வழங்குவது, வழிபாட்டு உரிமையை பாதுகாப்பது; மதத்தை அரசியலில் கலப்பதை எதிர்ப்பது, அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவது, மத அடிப்படைவாதம், வர்ணாசிரம தர்மத்தை எதிர்ப்பது, சனாதானம் என்ற பெயரில் சமூக ஏற்றத் தாழ்வை உருவாக்குவதை தடுப்பது, மூட நடவடிக்கையை அழிப்பது போன்ற நடவடிக்கைகளை திராவிடக் கருத்தியலாகக் கொள்ளலாம்.

மார்க்சியமும் இதைத்தான் பேசுகிறது. பொருளாதார சமத்துவம் மட்டுமல்லாமல், அரசியல், சமூக சமத்துவத்திற்காகவும் கம்யூனிஸ்ட்கட்சி இந்தியாவில், தமிழகத்தில் தோன்றிய காலத்தில் இருந்து போராடி வருகிறது.

விவசாயிகள் சங்கம் அமைத்து கம்யூனிஸ்ட் கட்சி நிலப்போராட்டத்தை தொடங்கினார்கள். ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு, ஜமீன் ஒழிப்பு நிலக்குவியலை எடுத்து நிலமற்றவர்களுக்கு வழங்குவது போன்ற போராட்டங்களை நடத்தியது. நிலப்போராட்டத்தின் போதே ஆண்டான் அடிமைத்தனத்தை ஒழிப்பது, ஆதிக்கத்தை ஒழிப்பது, தீண்டாமை கொடுமையை ஒழிப்பது போன்ற கோரிக்கைகளும் சேர்ந்தே இருந்தன.

தெருவில் நடக்க தடை, ஊரணியில் குளிக்கத்தடை, காலில் செருப்பு அணிந்து நடக்க தடை, தோளில் துண்டு போட தடை, இவைகளை எதிர்த்து ஆதிக்கத்தை உடைக்க போராடி வெற்றி கண்டோம். "துண்டை தோளில் போடு, அடித்தால் திருப்பி அடி" என முழங்கி ஒடுக்கப்பட்ட மக்களை உயிர்ப்பித்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

சென்னையில் முதல் முதலில் 1923ல் மே தினத்தை நடத்தியவர், சென்னை மாமன்ற உறுப்பினராக இருக்கும்போது மதிய உணவு திட்டத்தை முன்வைத்து மதிய உணவுத்திட்டத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர், 1925 ல் டிசம்பர் 26ல் முதல் கம்யூனிஸ்ட் மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் தோழர் சிங்காரவேலர். சுயமரியாதை, பகுத்தறிவு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, சுயமரியாதை போன்றவற்றிற்காக தொடர்ந்து போராடியவர். பெண் அடிமைத்தனத்தை எதிர்த்து போராடியதோடு பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு சட்டமன்றம் பாராளுமன்றத்தில் வேண்டும் என்று பாராளுமன்றத்தில் முதன்முதலில் குரல் எழுப்பியது கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரேணு சக்ரவர்த்தியும் கீதா முகர்ஜியும் ஆவர்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட்களின் அடையாளமாக விளங்கிய தலைவர் ஜீவானந்தம் அவர்கள் தந்தை பெரியாரோடு திராவிட இயக்கத்தில் பயணித்து கம்யூனிஸ்ட்டாக பரிணமித்தார்.

சமூக இழிவு என்பது பொருளாதாரத்தோடும் தொடர்புடையது. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு என்பது, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களை பொருளாதார ரீதியாகவும் உயர்த்தியது.

திராவிட மாடலில் பொருளாதாரக் கொள்கையும் உண்டு. தனியார்மய, தாராளமய, உலகமய முதலாளித்துவக் கொள்கைகளை உள்வாங்கிக் கொண்டதாகவே திராவிட மாடல் உள்ளது நெருடலானதாகும்.

அதே வேளையில், சமூக பண்பாட்டுத் தளங்களில் திராவிட மாடல் முன்வைக்கும் அம்சங்களை ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளடக்கி எடுத்துச் செல்லும்.

தொடர்புக்கு: 9443363828

## துணைவேந்தர் தேடுதல் குழு – தமிழ்நாடு ஆளுநரின் தலையீடு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**

துணைவேந்தர் தேடுதல் குழு–தமிழ்நாடு ஆளுநரின் தலையீட்டை கண்டிக்கிறோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் தேடுதல் குழுவை தமிழ்நாடு ஆளுநர் ஏற்கனவே அறிவித்திருந்தார். இக்குழுவில் உள்ள உறுப்பினர்களை நியமிக்கும் போது ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு அரசை கலந்து ஆலோசிக்கவில்லை. மேலும் இதுவரை இல்லாத நடைமுறையாக பல்கலைக்கழக மானிய குழுவின் பிரதிநிதியாக எச்.சி.எஸ்.ரத்தூர் அவர்களை ஒரு உறுப்பினராக நியமனம் செய்தார். தமிழ்நாடு அரசு இந்த போக்கை வன்மையாக கண்டித்ததோடு, தமிழ்நாடு மாநில உயர்கல்வி செயலாளர், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் தேடுதல் குழுவில் இருந்து பல்கலைக்கழக மானிய குழு உறுப்பினர் ரத்தோர் அவர்களை நீக்கி அரசு இதழில் அறிவிப்பு வெளியிட்டார். தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு அரசின் இந்த அறிவிப்பை திரும்ப பெறக் கோரி உயர்கல்வி செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். ஆளுநரின் இத்தகைய போக்கு மாநில அரசின் உரிமைகளில் தேவையற்ற தலையீட்டை உள்நோக்கத்தோடு செய்கிறார் என்பதை உறுதி செய்கிறது. ஆளுநரின் இத்தகைய செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழு வன்மையாக கண்டிக்கிறது. இப்பிரச்சனையில் மாநில அரசின் நிலைப்பாட்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவளிக்கிறது. இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிறு, குறு தொழில் நிறுவனங்களின் கோரிக்கை மீது முதலமைச்சர் தலையிட்டு தீர்வு காண வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் சிறு, குறு தொழில் நிறுவனங்களின் கோரிக்கை மீது முதலமைச்சர் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மின்கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும், நிலைக் கட்டணம் வசூலிப்பதை கைவிட வேண்டும் தொழில் நெருக்கடியை சந்தித்து வரும் நிலையில் அடர்த்தியான மின் நுகர்வு நேர கூடுதல் கட்டணத்தை முழுமையாக விலக்கிக் கொள்ள வேண்டும், மின் கட்டண பட்டி 3 ஏ 1 க்கு மாற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து, அரசின் கவனத்தை குறிப்பாக முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கும் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மாண்புமிகு சிறு, குறு தொழில்துறை அமைச்சர், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து பேசும் அரசின் அணுகுமுறை வரவேற்கதக்கது. இருப்பினும் தமிழ்நாட்டு வேலை வாய்ப்பு, பொருளாதார சுயசார்பு, பொருள் உற்பத்தி மற்றும் தயாரிப்பு போன்றவற்றில் பெரும் பங்களிக்கும் ஜவுளி, மின்பொருள் உற்பத்தி, எந்திரங்கள் தயாரிப்பு, உப பொருட்கள் தயாரிப்பு என பரந்த பட்ட அளவில் நடந்து வரும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் மீதும், அதன் முதலீட்டாளர்களின் கோரிக்கைகள் மீதும் தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு பேசுவதும், தீர்வு காண்பதும் உடனடித் தேவையாகும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## உடல் உறுப்பு தானம் செய்வோருக்கு அரசு இறுதி மரியாதை

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு**

உடல் உறுப்பு தானம் செய்வோருக்கு அரசு இறுதி மரியாதை செய்யப்படும் என்ற முதல்வரின் முன்னுதாரண முயற்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கை.

தாம் இறப்பதற்கு முன் உடல் உறுப்புகளை ஈந்து பல மனித உயிர்களை காப்போரின் தியாகத்தினை போற்றிடும் வகையில் உடல் உறுப்பு கொடை வழங்குவோரின் இறுதி நிகழ்வுகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பது நாட்டின் முன்னுதாரண முயற்சி என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வரவேற்கிறது. உடல் உறுப்பு கொடையின் மூலம் பல நூறு பேருக்கு வாழ்வளிக்கும் அரும் பணியில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது.

மூளைச்சாவு அடைந்த துயரச் சூழலிலும் அவர்களின் உடல் உறுப்புகளை கொடையாக அளிக்க முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகங்களால்தான் மேற்கண்ட சாதனைகள் சாத்தியமாகிறது.

உடல் உறுப்புதானம் என்பதின் அவசியம் மேன்மேலும் உணரப்பட மக்கள் நல்வாழ்வுத்துறை, மருத்துவத்துறை தமிழக அரசின் கீழ் எடுக்கும் முயற்சிகள் மேன்மேலும் தொடரட்டும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# விலைவாசி உயர்வுக்கு ஏற்ப 40% கூலி உயர்வு

## தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தீர்மானம்

கட்டுக்கூலி, மூடை சுமை தொழிலாளர்முன்னேற்ற சங்கம் ஏஐடியுசி ஆண்டுவிழா சங்க அலுவலகத்தில் நடந்தது. சங்கத்தலைவர் ஞானசேகர் தலைமை வகித்தார். நிர்வாகிகள் முருகேசன், மாரிமுத்து முன்னிலை வகித்தனர். சங்கப் பொதுச்செயலாளர் கணபதி சுப்பிரமணியன் பல்வேறு திட்டங்கள் குறித்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர; கரும்பன், ஏஐடியுசி மாவட்டத் தலைவர் கிருஷ்ணராஜ், மாவட்ட பொதுச் செயலாளர் லோகநாதன், சங்கச் செயலாளர் பாலசிங்கம், கவுன்சிலர் தனலெட்சுமி மற்றும் நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். சங்க உதவி செயலாளர் ஜீவா நன்றி கூறினார்.

உணவு பொருட்கள் விலையேற்றம் 11.5 சதவீதம் உயர்ந்துள்ளதால், இந்த ஆண்டு கூலி உயர்வை 40 சதவீதம் உயர்த்த இந்திய வியாபார சங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### நாமக்கல் கட்டட தொழிலாளர் சங்கத்தின்

# மாவட்ட அலுவலகம் திறப்பு



நாமக்கல் மாவட்ட தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட அலுவலகம் திறப்பு விழா மாணிக்கம்பாளையம் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது.

கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.குமார் தலைமை வகித்தார். கட்டட சங்க மாவட்ட துணை தலைவர் எம்.நடேசன் மற்றும் மாவட்ட பொருளாளர் ஜி.முருகேசன் ஆகியோர் முன்னிலையில் கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.கோபிராஜ் வரவேற்று பேசினார்.

ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பெயர் பலகை திறந்து வைத்து வாழ்த்தி பேசினார். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன் அலுவலகத்தை திறந்து வைத்து வாழ்த்தி பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் க.அன்புமணி, வி.தொ.ச. மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.மாரியம்மாள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### பெரியார் பிறந்தநாளில் அவரது நினைவிடத்தில்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் அஞ்சலி




பெரியாரின் 145 வது பிறந்தநாளையோட்டி பெரியார் திடலில் உள்ள நினைவிடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மத்திய சென்னை மாவட்ட துணை செயலாளர் இரா.ரஞ்சித் ,வடசென்னை மாவட்டக்குழு உறுப்பினர்கள் இராஜசேகர்,நாகராஜ், நத்தானியேல்,சீனிவாசலு, மாதவரம் பகுதி துணை செயலாளர் ஆனந்தன், கொளத்தூர் ரவி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## வினாடி - வினா விடைகள்

1. ஆந்திரா (1953 அக்டோபர் 1ல் உருவானது)
2. ஜி.வி. மாவலங்கர்
3. அரசியல் சட்டத்தின் 356 ஆவது பிரிவு
4. இந்தியா
5. மாசேதுங்
6. அண்டார்டிகா

# தோழர் தஞ்சை ஜி.கிருஷ்ணன் மறைவுக்கு கம்யூனிஸ்ட் தலைவர்கள் புகழஞ்சலி!




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர்களில் ஒருவரான தஞ்சை ஜி.கிருஷ்ணன் தனது 82 வது வயதில் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்திய தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தினர்கள்.

புகழஞ்சலிக் கூட்டம் 13.09.2023 அன்று மாலை தஞ்சை கிழக்கு ராஜ வீதியில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகம் முன்பு, தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் உத்தராபதி தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசும்போது, “தோழர் ஜி.கிருஷ்ணன் அவர்களின் மறைவு செய்தி கேட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு ஆகியோர் இரங்கல் செய்தியை தெரிவித்து இருக்கிறார்கள்.

தோழர். கிருஷ்ணன் நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் பிறந்தவர். அவரோடு பிறந்தவர்கள் ஏழு பேர்கள், தஞ்சைக்கு வேலை காரணமாக வந்தவர், பணி ஆணை வருவதற்கு கால தாமதமானதால், கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திலேயே தங்கினார். பின்னர் வேலைக்கு போக மறுத்து விட்டார். கம்யூனிஸ்ட் கட்சியிலேயே முழு நேர ஊழியராக தனது பணியை தொடங்கினார். ஏறத்தாழ 62 ஆண்டு காலம் தஞ்சை அலுவலகத்திலேயே தங்கி பணியாற்றினார்.

இந்த மாவட்டத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சியின் தலைவர்களையும் அவர் நன்கு அறிவார். அவருக்கு திருமணம் செய்து வைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதை அவரே வேண்டாம் என்று மறுத்துவிட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பழுத்த பழம் ஒன்று உதிர்ந்து விட்டது. அவர் நல்ல பேச்சாளர், நல்ல கட்டுரையாளர், சாந்தி பத்திரிக்கையிலும், ஜனசக்தியிலும் கட்டுரைகள் எழுதுவார். கவிதை எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

இன்னும் சில ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக்க முடியும், அவரது பிடிவாதத்தால் தான் அவருக்கு தற்போது மரணம் ஏற்பட்டது. தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கம் கணபதியா பிள்ளை கமிஷனுக்கு கொடுத்த அறிக்கை, வரலாற்று சிறப்புமிக்க அறிக்கை.

அந்த அறிக்கையை அனைவரும் படிக்க வேண்டும். அதில் இந்த மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்கள் படும் துயரம், இந்த மாவட்டத்தினுடைய பொருளாதாரத் தன்மை, இவை அனைத்தையும் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. தோழர்கள் காத்தமுத்து, மன்னார்குடி ஆறுமுகம், ஏ.எம்.கோபு, ஆர்.நல்லகண்ணு, மைதிலி என எல்லோரும் சேர்ந்து தயாரித்த மகத்தான அறிக்கை அது. அந்த அறிக்கையை முழுமையாக தட்டச்சு செய்தவர் தோழர் ஜி.கே.அவர்கள்.

இடைவெளி இல்லாமல் எல்லோரோடும் பழகுவதை அவர் இயல்பாகக் கொண்டிருந்தார். அவர் உயர்த்திப் பிடித்த செங்கொடியை நாமும் உயர்த்திப் பிடிக்க வேண்டும். அவருடைய உயரிய லட்சியம் வெற்றி பெற நாமும் பாடுபட வேண்டும்,” என்றும் ஆர்.முத்தரசன் கூறினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கட்டுபாட்டு குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி.கட்டத் தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் கே.இரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வை.சிவபுண்ணியம், கே. உலகநாதன், தமிழ் தேசிய விடுதலை இயக்கம் மணியரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி.பழனிசாமி, பாண்டியன், திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாநில செயலாளர் மாசிலாமணி, ஏஐடியூசி செயலாளர் சி. சந்திரகுமார், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாநில செயலாளர் பத்மாவதி, விவசாயத் தொழிலாளர் சங்கம் தமிழ் மாநில செயலாளர் ஆ.பாஸ்கர், தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, வை.செல்வராஜ் உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தினர்.

# தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதகமாக, நீட் கட் ஆப் மதிப்பெண்ணை குறைப்பது சரியல்ல!

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கண்டனம்

மருத்துவ மாணவர் சேர்க்கையின் கடைசி நேரத்தில் நீட் கட் ஆஃப் மதிப்பெண்ணை ,தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதகமாக குறைப்பது சரியல்ல.

மாணவர் சேர்க்கையை மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் மட்டுமே நடத்திட வேண்டும். தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு மாப் அப் மற்றும் ஸ்ட்ரே கவுன்சிலிங்கிற்கு அனுமதி வழங்கிடக் கூடாது. சமூக சமத்துவத்திற்கான டாக்டர் சங்கம் ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல். இதுகுறித்து இச் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர் இரவீந்திரநாத் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில், இறுதிக்கட்ட மாணவர் சேர்க்கையின் பொழுது , கட் ஆப் மதிப்பெண்ணை குறைப்பது என்பது தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதகமானதாகும். நல்ல மதிப்பெண் வாங்கிய மாணவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகும். மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையை சூதாட்டம்(Gambling) போல் மாற்றும் இத்தகைய நடைமுறைகளை ஒன்றிய அரசு கைவிட வேண்டும். அதே சமயம், மருத்துவ இடங்கள் காலியாக போவதையும், முறைகேடுகளையும் தடுக்கும் வகையிலும், தகுதி அடிப்படையிலான மாணவர் சேர்க்கையை உறுதி செய்திடும் வகையிலும், சமூக நீதியை காத்திடும் வகையிலும் மாணவர் சேர்க்கை நடைமுறைகளை வகுத்திட வேண்டும்.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கு மாநில அரசும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கு ஒன்றிய அரசும் மட்டுமே மாணவர் சேர்க்கையை நடத்திட வேண்டும்.

தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையை எக்காரணம் கொண்டும், அந்நிறுவனங்களே நேரடியாக நடத்திக் கொள்ள அனுமதிக்கக் கூடாது.

தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை மருத்துவக் கல்லூரிகளின் 100 விழுக்காடு இடங்களுக்கும் மாநில மற்றும் ஒன்றிய அரசுகளே கட்டணத்தை நியாயமான முறையில் நிர்ணயித்திட வேண்டும்.

ஏழை மாணவர்களின் கல்விக்கட்டணத்தை அரசே ஏற்க வேண்டும். கூடுதல் கட்டணம் வசூல் செய்யும் நிறுவனங்கள் மீது கட்டாய நன்கொடைச் சட்டம் மூலம் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கட்டணத்தை கவுன்சிலிங் பொழுதே டி.டி. மூலம் செலுத்தும் முறையை கொண்டுவர வேண்டும்.

நுழைவுத் தேர்வுகளில்,சமூக நீதிக்கு எதிராக குறைந்த பட்ச தகுதி மதிப்பெண் நிர்ணயிப்பதை ரத்து செய்ய வேண்டும்.

கடந்த காலத்தில், மத்திய அரசு மருத்துவ கல்லூரிகளுக்கான தேசிய நுழைவுத் தேர்வுகள்,CET -Common Entrance Tests என்ற பெயரில் நடப்பட்டதன. அதில் சில வற்றில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் இல்லை.

முதுநிலை மருத்துவம் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளில், தேர்ச்சி பெறுவதற்கு குறைந்த பட்ச மதிப்பெண்ணை 40% ஆக உச்ச நீதிமன்றம் நிர்ணயித்ததால், தமிழ்நாட்டின் நுழைவுத் தேர்வு அடிப்படையில் முதுநிலை மாணவர் சேர்க்கையை நடத்திய பொழுது பி.சி முஸ்லீம் BC(M),எஸ்.சி(எ) SC(A) மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான இடங்களை பயனாளிகள் முழுமையாகப் பெற முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, ஒரு நுழைவுத் தேர்வில் குறைந்த பட்ச தகுதி மதிப்பெண் என்பதை நிர்ணயிப்பதை கைவிட வேண்டும். நுழைவுத் தேர்வுத் தேர்வு என்பது ஒரு போட்டித் தேர்வுதானே தவிர, தகுதிகாண் தேர்வல்ல. முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர்வதற்கான தகுதி என்பது, எம்.பி.பி.எஸ் படிப்பில் தேர்ச்சி பெற்று மருத்துவராக பதிவு செய்திருக்க வேண்டும் என்பதுதான்.

# இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாவட்ட, வட்ட மாநாடுகள்




தமிழ்நாடு முழுவதும் இந்திய தேசிய மாதர் சம்மேளன மாவட்ட, வட்டார மாநாடுகள் நடைபெற்றன.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட 13வது மாநாடு நடைபெற்றது. மாரீஸ்வரி, வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணி, அமுல்ராணி ஆகியோர் தலைமைக் குழுவாக செயல்பட்டார்கள். வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் கொண்டம்மாள் மாதர் சங்க கொடியை ஏற்றி வைத்தார் . கவிதா வரவேற்று பேசினார். மாநில துணைத் தலைவர் இராஜலட்சுமி மாநாட்டை தொடங்கிவைத்துப் பேசினார். சிபிஐ தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் வாழ்த்திப் பேசினார்கள்.

மாநாட்டில் தலைவராக மாரீஸ்வரி, துணைத் தலைவர்களாக தவமணி, அமுல்ராணி, மருகேஸ்வரி ஆகியோரும், செயலாளராக பாண்டிச்செல்வி துணைச்செயலாளர்களாக மணிமேகலை,தமிழரசி, முருகேஸ்வரி ஆகியோர்களும், பொருளாளராக முத்துலட்சுமி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும், அனைத்து குடும்பங்களுக்கும் பெண்கள் உரிமைத் தொகை ரூ 1000 வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**கரூர்:** இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் கரூர் மாவட்ட மாநாடு புலியூர் பெரியகாண்டியம்மன் திருமண மண்டபத்தில் மாவட்ட செயலாளரும் புலியூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கே.கலாராணி தலைமையில் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் டி.பி.லலிதா சிறப்புரை ஆற்றினார்.இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்.என்.நாட்ராயன் மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். சிபிஐ மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார், ஏஐடியுசிமாவட்ட செயலாளர் ஜிபிஎஸ்.வடிவேலன், ஏஐஒய்எஃப் மாவட்ட செயலாளர்வி.லட்சுமி காந்தன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.




கரூர் மாவட்ட தலைவராக என்.ரஜினியும்,மாவட்ட செயலாளராக கே.கலாராணியும் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டை நிறைவு செய்து சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்.எம்.ரத்தினம் பேசினார்.மாநாட்டில் பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். நாடு முழுவதும் குழந்தைகள், சிறுமிகள் பெண்கள் மீது நாள்தோறும் பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

**தஞ்சாவூர்:** இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 15 வது மாவட்ட மாநாடு தஞ்சாவூரில் மாவட்ட தலைவர் எஸ்.தனசீலி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டு கொடியினை மாநில துணைச் செயலாளர் மு.கண்ணகி ஏற்றி வைத்தார். மாவட்ட பொருளாளர் ஸ்ரீதேவி வரவேற்புரை ஆற்றினார்.மாநகர செயலாளர் கே.கல்யாணி அஞ்சலி உரையாற்றினார். மாநில செயலாளருமான பி. பத்மாவதி மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி மாநாட்டினை நிறைவு செய்து பேசினார்.

மாநாட்டில் நாள்தோறும் உயர்ந்து வருகின்ற பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு விலை உயர்வினால் அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படுகின்ற அரிசி மளிகை காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பண்டங்கள் விலை நாள்தோறும் ஏறி வருகிறது. இதனை மத்திய, மாநில அரசுகள் கட்டுப்படுத்த வேண்டும்

**சூலூர் தெற்கு வட்டாரம்:** கோவை மாவட்டம், சூலூர் தெற்கு வட்டாரம், கண்ணம்பாளையம் பாலன் இல்லத்தில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சூலூர் தெற்கு வட்டார ஐந்தாவது மாநாடு மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.சுதா, சூலூர் சரஸ்வதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் வே.மரகதம் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். வட்டாரச் செயலாளர் ர.மாலதி வேலை அறிக்கையை சமர்ப்பித்து பேசினார்.

மாநாட்டை வாழ்த்தி மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் கே.சுமதி, கோவை மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டார செயலாளர் வே.வசந்தகுமார், ஏஐடியுசி மாவட்டப் பொருளாளர் பி.சுப்பிரமணியம், இஸ்கப் மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் ஆகியோர் பேசினார்கள்.

தலைவராக எஸ்.சுதா, துணைத் தலைவர்களாக பி.சரஸ்வதி, பி.வசந்தாமணி, செயலாளராக ர.மாலதி துணைச் செயலாளராக பா.கற்பகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருத்துறைப்பூண்டி ஒன்றியம்:** திருத்துறைப்பூண்டியில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 16வது ஒன்றிய மாநாடு, சங்கத்தின் ஒன்றிய தலைவர் எஸ். கவிதா தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டு கொடியினை கோட்டூர் ஒன்றிய செயலாளர் உஷா ஏற்றி வைத்தார். நினைவு ஸ்தூபியினை சங்கத்தின் மாநில குழு உறுப்பினர் கோ.குருமணி திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். வேலை அறிக்கையை ஒன்றிய செயலாளர் சு.தமிழ்ச்செல்வி முன்மொழிந்தார். மாநாட்டில் மாவட்ட செயலாளர் எஸ். தமயந்தி அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

தலைவராக எஸ்.கவிதா, செயலாளராக சு.தமிழ்ச்செல்வி, பொருளாளராக ஜோதி மற்றும் நான்கு துணைத் தலைவர்கள் நான்கு துணை செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

ராமாமிர்தம் திருமண உதவித் திட்டம் மற்றும் தாலிக்கு தங்கம் திட்டத்தை மீண்டும் தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் இறுதியாக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கோ. பழனிச்சாமி கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார். திருத்துறைப்பூண்டி சட்டபேரவை உறுப்பினர் க.மாரிமுத்து, சங்கத்தின் தேசிய குழு உறுப்பினர் மாலா பாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே. ஆர். ஜோசப், கே. ராஜா, கட்சியின் ஒன்றிய செயலாளர் வி.ஜவஹர் ஆகியோர் கலந்துகொண்டு மாநாட்டினை வாழ்த்தி பேசினர்.

**கோவை:** இந்திய மாதர் தேசிய சம்மேலகத்தின் கோவை மாநகர மத்திய மண்டல மாநாடு கோவை ரத்தினபுரியில் நடைபெற்றது. ஜே.கலா தலைமை தாங்கினார். மூத்த தோழர் ஏ.அமிர்தம் கொடி ஏற்றி வைத்தார். மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டனர்.

வீட்டில் இருக்கும் குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தமிழ் நாடு அரசு அமல்படுத்தியுள்ளது. கட்டுபாடுகள் தளர்த்தப்பட்டு, திட்டம் விரிவுபடுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ், மத்திய மண்டல செயலாளர் கே.ரவீந்திரன், துணைச் செயலாளர் ஏ.பி.மணிபாரதி, இந்திய மாதர் தேசிய சமநலத்தின் மாவட்ட தலைவர் எம்.நிர்மலா, மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் மத்திய மண்டலத் தலைவராக பாப்பாத்தி, செயலாளராக ருக்குமணி, பொருளாளராக சகுந்தலா, மண்டலக்குழு உறுப்பினர்களாக பிரபா, திலகவதி, சுதா, ராஜேந்திரமேரி, செல்விரதி, சிவகாமி, ஈஸ்வரி ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

## எம்.ஆர்.பி ஒப்பந்த செவிலியர்கள் போராட்டத்திற்கு தீர்வு காண ஏஐடியுசி வலியுறுத்தல்

போராடும் எம்.ஆர்.பி ஒப்பந்த செவிலியர்கள் கோரிக்கைகள் மீது தமிழ்நாடு அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

கொரோனா பேரிடர் தொற்றுக் காலத்தில் கடந்த 2020 ஆண்டு, சுமார் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் 300 மருத்துவர்கள் தற்காலிகமான முறையில் பணியமர்த்தப்பட்டனர். இதில் 3 ஆயிரம் செவிலியர்களுக்கு தற்காலிக செவிலியர் பணியில் இருந்து நிரந்தர தன்மையுடைய செவிலியர்களாக பணி மாற்றம் செய்யப்பட்டது.

மேலும் 300 தற்காலிக மருத்துவர்களும் நிரந்தர மருத்துவர்களாக பணிமாற்றம் செய்யப்பட்டனர். மீதமுள்ள 3 ஆயிரத்து 290 தற்காலிக செவிலியர்களுக்கு, சுமார் 3 ஆயிரத்து 300 காலிப்பணியிடம் இருப்பதால் நிரந்தர தன்மையுடைய செவிலியராக மாற்றம் செய்யவேண்டும் என்று அரசிடம் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்த தமிழ்நாடு அரசு எவ்வித முன்னறிவிப்பின்றி செவிலியர்களை பணிநீக்கம் செய்தது.

இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் பாதிக்கப்பட்ட எம்.ஆர்.பி கோவிட் செவிலியர்கள் தேர்வில் உரிய தேர்வு நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதால், பணி நியமனம் வழங்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் தமிழக அரசு தற்போது வரை பணி வழங்கவில்லை. உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பணி நியமனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே செவி லியர்கள் குடும்பத்தோடு, கைக்குழந்தைகளுடன் 3 நாட்கள் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு செவிலியர்களின் நியாயமான கோரிக்கையை அவர்களோடு பேசி தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு ஏஐடியுசி சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வலியுறுத்தி

## சி.பி.ஐ. – வி.தொ.ச தொடர் காத்திருப்பு போராட்டம்

மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றியம் வீ.பெரியபட்டி, முகவனூர், அமையபுரம் உட்பட பல்வேறு ஊராட்சிகளில் உள்ள கூலி தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு பட்டா வழங்காமல் காலம் தாழ்த்தும் வட்டாச்சியரை கண்டித்தும், உடனடியாக இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வலியுறுத்தி நா.பூலாம்பட்டி வருவாய் அலுவலகம் முன்பு இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி,தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் த. இந்திரஜித் போராட்டத்தை துவக்கிவைத்து உரைநிகழ்த்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ராஜ் குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கனேசன், ஏஐடியூசி மாவட்ட குழு உறுப்பினர் சுந்தர்ராஜ் ஆகியோர் சிறப்புரை நிகழ்தினார்கள்.

போராட்டக்காரர்களுடன் வருவாய் துறையினர் நடத்திய பேச்சு வார்த்தையில், இலவச வீட்டுமனை பட்டா சம்பந்தமாக வட்டாச்சியர் அலுவலகத்தில் வருகிற 26/09/2023 அன்று அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

### 133. கல்லும் மாணிக்கமும்

**வயிரமது வானென்ப வாய்ப்புடைய அந்த**
**வயிரம் கரியற் றிலை.**

'வைரம்' மக்களால் மிக உயர்வாக மதிக்கப்படும் ஒரு பொருளாகும். இதுவும் கரியில் பிறந்ததுதான் (எளிய மக்களிடமிருந்தே அறிஞன் பிறக்கிறான்).

**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ கல்லில்லா**
**மாணிக்கக் கல்லாமோ காண்.**

எல்லாக் கற்களும் மாணிக்கமாவதில்லை. ஆயினும், கல் இல்லாமல், மாணிக்கக்கல் தோன்றுவதில்லை (பொதுமக்களின்றி சான்றோன் இல்லை).

## விவசாய தொழிலாளர்களின் விடிவெள்ளி

# பி.சீனிவாசராவ்

**தமிழகம் கண்ட ஒப்பற்ற தலைவர்களில் ஒருவர் தோழர். பி.சீனிவாசராவ் அவர்கள். 1907 ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதி கர்நாடக மாநிலம் படகராவில் ஒரு வைதீக பிராமண குடும்பத்தில் பிறந்தவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.**

1920 ல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபை நாட்டு மக்களுக்கு ஒத்துழையாமை இயக்கத்திற்கு அறைகூவல் விட்டது. பெங்களூரு கிறிஸ்து கல்லூரியில் படிப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்த சீனிவாசராவ் அக்கல்லூரியை விட்டு வெளியேறினார்.

வீட்டையும் விட்டு வெளியேறினார். அனைத்தையும் இழந்து ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டார்.

1930 களில் அந்நியர் விற்பனை செய்யும் துணிக்கடை முன் போராட்டத்தில் சீனிவாசராவ் ஈடுபட்டார். தினசரி போராட்டம் தொடர்ந்தது. நாள்தோறும் சீனிவாசராவை போலீசார் அடித்து துவைப்பது என்பது வாடிக்கையாகி விட்டது. காவல்துறை தடி கொண்டு தாக்கியதால் மண்டை உடைந்து இரத்தம் கொட்டிச் சாலையில் சாய்ந்த அந்த இளைஞனை பார்த்த காவலர்கள் செத்து விட்டான் என்று நினைத்து சாலையோரத்தில் இருந்து சாக்கடையில் தள்ளிவிட்டு சென்றார்.

அன்றைய ஆங்கில பத்திரிகைகளில் காங்கிரஸ் தொண்டர் சீனிவாசராவ் என்ற இளைஞர் இறந்தார் என்ற செய்தியும் வந்தது.

சாலையோரத்தில் பிணமாக கிடந்த இளைஞனை தாயுள்ளத்தோடு ஒரு பெண்மணி தனது இல்லத்திற்கு ஒரு ரிக் ஷா வில் ஏற்றி வந்து கொதிக்க வைத்து தண்ணீரில் குளிப்பாட்டி மஞ்சள் பத்து போட்டு மருத்துவம் செய்தாள்.

நான்கு நாட்கள் கழித்து மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார் சீனிவாசராவ்.

அந்நிய துணிக்கடையில் மீண்டும் மறியலில் ஈடுபட்ட காரணத்தால் கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். சீனிவாசராவ் அடைக்கப்பட்ட சிறையில் இருந்த நேதாஜி சுபாஷ் சந்திர போசுடன் நட்பு கொண்டு பல நேரம் விடுதலை பற்றியும் தேசத்தைப் பற்றியும் அவரோடு உரையாடிய நல்ல வாய்ப்பைப் பெற்றார்.

1932 ஆம் ஆண்டுகளில் சட்டமறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட அனுபவத்தின் மூலம் காந்தியின் தலைமையில் அதிருப்தியும், அவநம்பிக்கையும் அடைந்த இளைஞர்களின் பலர் மார்க்சியத் தலைமையின் பால் ஈர்க்கப்பட்ட காலம். சென்னைக்கு வந்து தோழர். அமீர்ஹைதர்கானை சந்தித்து பின்பு 1932/1933 ல் கம்யூனிஸ்ட் ஆனார் தோழர். பி. சீனிவாசராவ் அவர்கள்.

ஜனசக்தி பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றினார். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் என்ற நிறுவனத்தை நிறுவினார். தஞ்சை ஜில்லாவில் நடப்பது என்ன என்று நூலும், தலைமறைவு அனுபவங்களை தலைமைக்கு எழுதிய கடிதங்களும் அவரது இலக்கிய செறிவை காட்டுகிறது.

தமிழகத்தில் கிராமப்புற மக்களை ஒன்று திரட்ட தலைமை வழி காட்டியபடி தஞ்சை மாவட்டத்திற்கு வந்தார்.

பி. எஸ். ஆர். க்கு தமிழ் பேசத் தெரியும். எழுதவோ, படிக்கவோ தெரியாது. கன்னடம் தாய்மொழி. ஆங்கிலம் சரளமாக பேசவும் எழுதவும் ஆற்றல் மிக்கவர். சென்னையில் இருந்து புறப்பட்டு தஞ்சை மண்ணிற்கு வந்தார்.

மன்னார்குடி தாலுகா, கலப்பால் கிராமத்தில் கலப்பால் குப்புவின் தலைமையில் ஒடுக்கப்பட்டோர் கூடினர்கள்.



நிலபிரபுக்களிடம் பட்ட இன்னல்கள் , அனுபவிக்கும் துன்பங்களை முதியோர் முதல் இளைஞர்கள் வரை கூறினார்கள்.

நாங்கள் இருக்கிறோம். தைரியத்தோடு நீங்கள் துணிந்து செயல்படுங்கள் இது தான் பி. எஸ். ஆரின் முழக்கம்.

தினம் தினம் கிராமங்களுக்கு சென்று ஊழியர்களைத் தயார் செய்தனர். கிராமங்கள் தோறும் கூட்டம், கொடியோற்றல், சங்கம் அமைத்தால் எனக் கிராமத்துப் பாட்டாளிகளின் செங்கொடியின் கீழ் அணி திரண்டனர்.

மரக்காலில் சோறு வாங்கதே, வாழைப் பட்டையில் தண்ணீர் குடிக்காதே, பொதுக் குளங்களில் இறங்கி குளி, தண்ணீர் எடு, கோவில்களுக்கு உள்ள போ, இடுப்பில் வேட்டி கட்டு, தோளில் துண்டு போடு, பெண்கள் சட்டையணிந்து வெளியில் வரட்டும். வயலிலிருந்து கரையேறிக் குழந்தைகளுக்கு பால் கொடுங்கள் என கூட்டங்களில் தைரியமூட்டினார் பி.எஸ்.ஆர்.

நிலப்பிரபுக்களின் கொட்டத்தை அடக்க முதன்முதலில் 1943 ல் ஜனவரியில் தென்கரை கிராமத்தில் சங்கத்தை உருவாக்கி செங்கொடியை ஏற்றி அடிமைப்பட்ட மக்களுக்கு புது திசை வழியைக் காட்டினார். பி. எஸ். ஆர் அவர்கள்.

1944 ல் களப்பால் ஒப்பந்தம், மன்னார்குடி ஒப்பந்தம் இந்த இரண்டு ஒப்பந்தங்கள் மூலம் சாட்டையால் அடிப்பதையும், சாணிப்பால் கொடுப்பதும் நிறுத்தப்பட்டது. நிலப்பிரபுக்களையும், விவசாயிகளையும், அதிகாரிகளையும், கையெழுத்திட வைத்தது.

நிலச்சீர்திருத்த கோரிக்கைக்கு ஆதரவு திரட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மதுரையில் இருந்து மணலி கந்தசாமி தலையிலும், கோவையில் பி. சீனிவாசராவ் அவர்களின் தலைமையிலும் நடைப் பயணயாத்திரை பல ஆயிரக்கணக்கான மக்களிடமும் கிராமங்களிலும் செங்கொடி இயக்கம் தனது முத்திரை பதித்தது.

1961 ம் ஆண்டு செப்டம்பர் 29 ம்தேதி நள்ளிரவில் தஞ்சையிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாற்றம் தந்த மாமனிதர் தோழர். பி. சீனிவாசராவை மரணம் என்னும் இயற்கை அழைத்து கொண்டது.

செப்டம்பர். 30 பகல் ஒன்றரை மணிக்கு தஞ்சையிலிருந்து காரில் ஏற்றப்பட்டு தோழர்கள் பி. ராமமூர்த்தி, எம். காத்த முத்து, கே. டி. ராஜி, உமாநாத், ஆகியோர் பி. எஸ். ஆர் அவர்களின் விருப்பப்படி திருத்துறைப்பூண்டி கொண்டு வந்து தியாக உடலை அடக்கம் செய்யப்பட்டது. (விதைக்கப்பட்டார்)

பி. எஸ். ஆர் நினைவு தினம் செப். 30.

**அ.பாஸ்கர் எழுதிய**
**மாற்றம் தந்த மாமனிதர் தோழர் பி.எஸ்.ஆர் என்ற நூலிலிருந்து**
**சு.மகேந்திரன்**

---

# தொழிற்சங்க தலைவர் தியாக சுடர் சி.கெ.மாதவன்



என்.எஸ்.பிரதாப் சந்திரன்

**விடுதலை பெற்ற இந்தியாவில் தொழிலாளர்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் முன்னேற்றத்திற்கான பொராட்டத்தில் தொழிற்சங்க தலைவராக பரிணமித்தவர் சி.கெ. மாதவன்.**

சென்னை அருகிலுள்ள மாதவரத்தில் ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் கெம்புவேல், மீனாட்சி தம்பதியரின் ஒரே மகனாக பிறந்தவர். அங்குள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தொழிலாளி வர்க்கம் படுகிற இன்னல்களை நேரில் கண்டு அவற்றிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்கிற லட்சிய வேட்கையோடு தொழிற்சங்க வாழ்க்கையில் அடி எடுத்து வைத்தவர். இவர் தொழிற்சங்க வாழ்க்கையில் அடியெடுத்து வைப்பதற்கு ஊக்கமும், உத்வேகமும் அளித்தவர் கம்யூனிஸ்ட் தலைவர் ப. ஜீவானந்தம் ஆவார்.

துறைமுக தொழிலாளியான மா.பொ. சுப்பிரமணியம் அவர்களின் திருமணத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்த ஜீவா . அந்த திருமண வேலைகளில் சுறுசுறுப்பாகவும், சுட்டிகையாகவும் ஒடி ஆடி வேலை செய்து கொண்டிருந்த சிறுவனான மாதவனை பார்க்கிறார். மாதவனை அருகில் அழைத்து 'தம்பி என்ன படிக்கிறாய்' என்று கேட்கிறார். அப்பொழுது மாதவன் 'தான் மூன்றாம் படிவம் படிப்பதாக' கூறுகிறார். அதற்கு ஜீவா 'நீ படித்து என்ன செய்யப் போகிறாய்' என்று கேட்கிறார். 'நான் படித்து பெரிய அதிகாரியாக வரப்போகிறேன்' என்று கூறுகிறார். அதற்கு ஜீவா ' இந்த பகுதியில் இருக்கிற மக்களை நீ பார்த்தாயா? இவர்கள் அனைவரும் காலையிலிருந்து இரவு வரை தோல் தொழிற்சாலைகளில் தோளோடு தோளாக நீரில் மூழ்கி கிடக்கிறார்கள். இவர்கள் படுகிற துன்பத் துயரங்களை எல்லாம் நீ கவனித்திருக்கிறாயா? இவர்களை விடுவிக்க வேண்டும். வாழ்க்கையில் அவர்களை உயர்த்த வேண்டும் என்று நீ ஒருபோதும் நினைக்கவில்லையா? என்று கேட்கிறார்.



அப்போதுதான் சிறுவனான மாதவனுக்கு ஒரு தீப்பொறி பற்றுகிறது. நாம் ஏன் இந்த தொழிலாளர்களுடைய வாழ்க்கை உயர்வதற்காக வேண்டும் என தீர்மானிக்கிறார். அதன் விளைவு தான் முன்னாள் மேயர் எஸ் . கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான மாதவரம் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தில் சந்தா வசூலிப்பாராக பணியில் சேருகிறார். அப்படி சந்தா வசூலிக்கும் பணியில் சேர்ந்தவர் படிப்படியாக முன்னேறி, சங்கம் மற்றும் ரசியல் ரீதியாக அந்த தொழிற்சங்கத்தின் தலைவராக வருகிறார்.

மாதவரம் மட்டுமல்லாது, வேலூர் , வாணியம்பாடி, திண்டுக்கல் போன்று பல்வேறு மாவட்டங்களில் உள்ள தோல் தொழிலாளர்களை ஒன்று திரட்டி அவர்களுடைய உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுக்கிறார். அப்போது அவர் எழுதிய 'தோல் பதனிடும் தொழிலாளர் வாழ்க்கை நிலை' என்ற பிரசுரம் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறுகிறது. தொழிலாளர்கள் அணி அணியாக சங்கத்தில் இணைகிறார்கள்.

அப்போது அவர் சந்தித்த இன்னல்களும் கொஞ்சநஞ்சம் இல்லை. மாதவரத்தில் நாகப்பா செட்டி என்பவருக்கு சொந்தமான கீனா கொட்டா ஷாப் , நாயக்கர் ஷாப், ஒலை கொட்டா ஷாப் என்கின்ற பெயரில் பல தோல் மண்டிகள் உண்டு. இவர் ஆளும்கட்சியின் அனுதாபி வேறு. எனவே தொழிலாளர்களுக்காக பாடுபடும் சி.கெ. மாதவனை பேச்சுவார்த்தைக்கு வரவழைத்து உயிரோடு புதைப்பதற்கு குழி வெட்டி காத்திருக்கிறார்.

நாகப்பா செட்டியிடம் வேலை பார்த்த தனுசு மேஸ்திரியின் தங்கை கிஷ்டம்மா இதை அறிந்து, சி. கெ. மாதவனிடம் வந்து சொல்லி விடுகிறார். தக்க பாதுகாப்புடன் பேச்சுவார்த்தைக்கு சென்ற சி.கெ. மாதவன். நாகப்பா செட்டியை எச்சரித்துவிட்டு சதி வலையிலிருந்து மீண்டு வந்து விடுகிறார். எந்த தொழிலாளர்களுக்காக பாடுபட்டாரோ அதே தொழிலாளர்களால் காப்பாற்றப்பட்டார்.

அதேபோன்று சிம்சன் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், ஆளும் கட்சி தரப்பை சார்ந்த தொழிற்சங்கத்தினர். தொழிலாளர்களை வேலைக்கு வரவிடாமல் பயமுறுத்தல்களை செய்து கொண்டிருந்தனர். எனவே தொழிலாளர்களுக்கு தைரியத்தை ஊட்டுவதற்காக சிம்சன் நிறுவனத்தை ஒட்டி இருந்த ஆர்.வி.நகரில் சி.கெ. மாதவன் பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். அப்போது ஒரு லாரியில் வந்த காவல்துறையினர் கூட்டம் நடத்துவோரிடத்தில் ஏதேனும் ஆயுதங்கள் இருக்கிறதா என்று சோதனை செய்கின்றனர். அப்படி எதுவும் இல்லை என்று அந்த காவலர்கள் சென்றனர். அடுத்து நொடியே, வேறொரு காவல்துறை வாகனத்தில் ஆளும் கட்சியை சேர்ந்த ரவுடிகள் வந்து இறங்கி தொழிலாளர்களை அடித்து விரட்டுகின்றனர். தொழிலாளர்களும் எதிர் தாக்குதல் நடத்துகின்றனர். ஆனால், ஆயுதபானிகளுடன், நிராயுத பாணிகளான தொழிலாளர்களால் எப்படி தாக்குப் பிடிக்கும். எனவே , அனைவரும் தப்பித்து விடுகின்றனர்.

அனைவரும் சங்க அலுவலகத்திற்கு வந்த பின்னரும் தலைவர் சி.கெ மாதவனை காணோம். எனவே, தலைவருக்கு ஏதோ ஆகிவிட்டது என்று தொழிலாளர்கள் பதற்றம் அடைகின்றனர். அப்பொழுது ஒரு பெண் அந்த வழியாக நடந்து வருகிறார். அவர் யாரோ ஒரு பெண் என்று பார்த்தால். அவர் தான் தலைவர் சி.கெ. மாதவன். பெண் வேடம் இட்டு அங்கிருந்து தப்பி வந்திருக்கிறார்.

ஒருமுறை தொழிலாளர்களின் கூட்டத்தை முடித்துவிட்டு வந்து சங்க அலுவலகத்தில் படுத்து கொண்டிருக்கிறார் சி.கெ. எம். நடுநிசி ஆன பின்பும் அவர் தூங்கவில்லை. அப்போது அருகில் இருந்த ஒரு தொழிலாளி கேட்கிறார் 'என்ன தலைவரே ரொம்ப நேரம் ஆகிவிட்டது இன்னும் தூங்கலையா' என்று. 'ஒன்றும் இல்லப்பா' என்று சொல்லுகிறார். எனது சிறுகுடலுக்கும், பெருங்குடலுக்கும் சண்டை' என்று கூறுகிறார் .அப்போதுதான் அவர்களுக்கு தெரிகிறது தலைவர் இன்னும் சாப்பிடவில்லை என்று . இப்படி தொழிலாளர்களுக்காக பசி நோக்காமல், கண் துஞ்சாமல் பாடுபட்ட தலைவர் தான் சி.கெ.மாதவன்.

வறுமையும், பஞ்சத்தையும் அவர் அனுபவித்தாரே தவிர, தொழிலாளர்கள் வளமாக வாழ்வதற்கும் அரசியல் தெளிவு பெறுவதற்கும் ஒவ்வொரு நாளும் அயராது உழைத்துக் கொண்டிருந்தார். சிறிய தொழிற்சாலைகளில் இருந்து, பெரிய தொழிற்சாலைகள் வரை எத்தனையோ தொழிற்சங்கங்களுக்கு தலைவராக இருந்தார். அவர்களுக்கான கோரிக்கைகளை உருவாக்கி அவற்றை வென்றெடுப்பதற்காக போராடினார். இதனால்தான் எத்தனையோ ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சி.கே.எம். அவர்களை நினைவு கூர்கின்றது.

தொடர்புக்கு: 9382679798

கலை இலக்கியப் பூங்கா

தனி மனித உணர்வுகளை பேசும் இலக்கியங்கள் உன்னதமானவை, சமூக மாற்றத்தை பேசும் இலக்கியங்கள் ஆழமற்றவை, என்பது போன்ற தட்டையான வாதங்கள் வெறும் இலக்கிய ஆர்வத்தில் இருந்து மட்டும் வருவதில்லை. அதற்கு பின் ஒரு அரசியலும், பிரச்சாரமும் இருக்கிறது

# கலை இலக்கியத் துறையில் ஊடுருவும் சி.ஐ.ஏ


**- இரா.முருகவேள்**

3

இந்தப் படத்தின் உத்திகள் எதுவும் பயன்படுத்தப்படாமல்பலசெய்திகள் சொல்லப்படுகின்றன. பெரும்பாலும் செய்திப் படங்கள், பேட்டிகள், ஓவியங்கள், சிம்பாலிக்காக எடுக்கப்பட்ட காட்சிகள் மூலமே படம் விறுவிறுப்பாக நகர்கிறது.

படத்துக்காக செய்யப்பட்டுள்ள ஆய்வு, கொட்டப்பட்டுள்ள கடும் உழைப்பு, இடைவெளிகளை நிரப்ப, விடுகதைகளை அவிழ்க்க காட்டப்படும் அறிவு கூர்மை இதல்லாம் இந்தப் படத்தை தனித்து நிற்க வைக்கிறது.

தேவையான தகவல்களை கொடுக்கக் கூடியவர்களை தேடித் தேடிக் கண்டறிந்து, ஆயிரம் முறை சரிபார்த்து ஆதரபூர்வமாக வழங்கி எழுபது ஆண்டுகால குழப்பத்துக்கும், கேள்விகளுக்கும் விடையளித்து உள்ளது இந்த படம். மனதுக்கு அல்ல அறிவுக்கு எடுக்கப்பட்ட படம். தமிழக சூழலில் இந்தப் படம் முக்கியமானது.



இங்கும் க. நா. சு. போன்றவர்கள் காங்கிரஸ் ஃபார் கல்சுரல் பிரீடம் அமைப்பில் செயல்பட்டனர் என்ற குற்றச் சாட்டு இருந்தது. இது உண்மையா வெறும் வதந்தியா தெரியாது. ஆனால் விலங்கு பண்ணை, 1984 போன்ற கம்யூனிச எதிர்ப்பு நாவல்களை க. நா. சு. தமிழில் மொழிபெயர்த்தார்.

இது எப்படியோ இருக்கட்டும்.

தனி மனித உணர்வுகளை பேசும் இலக்கியங்கள் உன்னதமானவை, நுட்பமானவை, சமூக மாற்றத்தை பேசும் இலக்கியங்க்ள் ஆழமற்றவை, அழகியல் அற்றவை என்பது போன்ற தட்டையான வாதங்கள் வெறும் இலக்கிய ஆர்வத்தில் இருந்து மட்டும் வருவதில்லை. அதற்கு பின் ஒரு அரசியலும், பிரச்சாரமும் இருக்கிறது என்பதை புரிந்து கொள்வது கோஷ்டிகளாக பிரிந்து நிற்பது, குறிப்பிட்ட இலக்கியவாதியின் பால் அதீத அர்ப்பணிப்பு கொண்டவர்களாக இளைஞர்கள் மாறுவது ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய இந்தப் படம் உதவும்.

இயக்குநர் பிரான்சிஸ் ஸ்டோனர் சண்டர்ஸ் ஒரு ஆக்ஸ்போர்டு பட்டதாரி ஆவார். இந்த ஆவணப்படத்தை 1995 ஆம் ஆண்டு தனது 30 வது வயதில் எடுத்தார். பின்பு இதுவே நூலாகவும் வெளிவந்தது. தனது துல்லியமான ஆய்வுகளுக்காக புகழப் பட்டார். இந்தப் படம் இரக்கமின்றி வெளிப்படுத்திய ரகசியங்களினால் அதிர்ச்சியடைந்த இலக்கியவாதிகள், விமர்சகர்கள், இதழ்களால் கடுமையாகத் தூற்றவும் பட்டார்.

இந்த ஆவணப்படம் நூலாகவும் வந்துள்ளது. இதை இன்னும் விரிவுபடுத்தி The cultural cold war-who paid the piper என்ற நூலையும் எழுதியுள்ளார்.

இந்த ஆவணப்படம் நான்கு பாகங்கள் கொண்டது. சேனல் 4 க்காக எடுக்கப்பட்டது.

இரண்டாம் பாகம் A clean white world முதல் உலகப் போரின் கோரங்கள், அசிங்கங்கள் இவற்றிலிருந்து பஹுவாஸ் பள்ளி மற்று நவீனத்துவ கட்டிடக் கலைஞர்கள் ஆகியோரின் தூய்மையும் வெண்மையும் கொண்ட வாழ்விடம் என்ற கருத்தாக்கம் உருவாவதையும், கச்சிதமான உடலமைப்பு, ஆடம்பரமற்ற சுகாதாரமான வாழ்விடம் என்ற முழக்கம் உருவாவதையும் பின்பு நாஜிகள் இதை பயன்படுத்திக் கொள்வதையும் ஆவணப்படுத்தியிருப்பார்.

மூன்றாவது பாகம் Painting with the enemy இது நாஜிகளின் ஆகிரமிப்பில் பிரான்ஸ் இருந்த போது அவர்களுடன் ஒத்துழைத்த ஓவியர்கள், எதிர்த்து நின்ற பிக்காசோ போன்றவர்களைப் பற்றியது.

நான்காவது பாகம் Is anybody there இதில் மேடம் பிளாவட்ஸ்கியின் அமானுஷ்ய அனுபவங்கள் பற்றிய எழுத்துக்களில் இருந்து கண்டின்ஸ்கி போன்றவர்கள் மாடர்ன் ஆர்ட்டை வளர்த்து எடுப்பதைப் பற்றியது.

இந்த நான்கு பாகங்களுமே கட்டாயம் பார்க்க வேண்டியவை.

இந்தப் படத்தில் ஒளி ஓவியரின் பங்கு நுட்பமானது. உலகப் புகழ் பெற்ற ஓவியங்கள், விசித்திர மனநிலைகளைப் பிரதிபலிக்கும் வண்ணக் கோர்வைகள் ஆகியவற்றை அவர் நாம் புரிந்து கொள்ளும் வண்ணம் காட்ட வேண்டியிருந்திருக்கிறது. அதை அற்புதமாகச் செய்து இருக்கிறார்.

ஆனால் படத்தில் மிகச் சிறப்பாகத் தனித்துத் தெரிவது வெரோனிகா ஹைய்க்ஸின் பின்னணி குரல். இனிமையான வசீகரமான உச்சரிப்பு, தங்கக் கம்பி சாரீரம் என்று இசை விற்பன்னர்கள் சொல்வார்களே அது போன்றதொரு பிசிறடிக்காத நேர்த்தி... கேட்க வேண்டும் நம்புவதற்கு.

வெரோனிகாவின் குரல் நம்மை அவ்வளவு கவர்வதற்குக் பிரான்சிஸ் ஸ்டோனர் சாண்டர்ஸின் கூர்மையும் புத்திசாலித்தனமும் ஆழமும் கொண்ட எழுத்தும் ஒரு காரணம்.

ஒரு ஆவணப்படம் எந்த எல்லைக்குப் போக முடியும், காட்சி ஊடகத்தைக் கொண்டு என்னவெல்லாம் காட்டமுடியும் என்பதற்கு இது ஒரு அட்டகாசமான உதாரணம். நமது அறிவு மட்டத்தை வேறு தளத்துக்குத் தூக்கியடிக்கிறது.

நிறைவு

16 ஆம் பக்க தொடர்ச்சி

செல்வத்தை உருவாக்குகிறார்கள். ஆனால் அவர்கள் தேடுகிற செல்வங்கள் வேறு இடத்தில் சென்று சேருவதால் தான் இத்தனை தொல்லையும் வருகின்றன.

உலகின் பட்டினிப் பட்டியலில் 121 நாடுகள் உள்ளன. இந்தியா 107வது இடத்தில் இருக்கிறது. கடும் பட்டினியில் நாட்டு மக்கள் உழல்வதுதான் 75 ஆண்டு சுதந்திரத்தின் சாதனையா?

விவசாயிகள் தற்கொலை செய்து இறந்து கொண்டிருந்தார்கள். இப்போது தினக்கூலிகளான தொழிலாளர்களும் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஆனால் ஒரு சதவீதம் பேருக்கு மட்டும் இந்திய நாடு சொர்க்க பூமியாக இருக்கிறது. அவர்கள் கையில் நாட்டின் 60% சொத்துக்கள் இருக்கின்றன. நாட்டின் சரிபாதியான 70 கோடி மக்களுக்கு 3 சதவீத சொத்துக்கள் கூட இல்லை. ஒவ்வொரு நாளும் இந்த பிளவு அதிகரித்துக் கொண்டே போகிறது.

ஓய்வூதியம் இல்லை; சம்பள உயர்வு இல்லை; வேலை வாய்ப்பில்லை; கிராமப்புற வேலை உறுதி திட்டத்திற்கு ஒதுக்க நிதி இல்லை. காரணம் கேட்டால், வரி செலுத்துவோர்களின் பணத்தை எடுத்து எல்லோருக்கும் தர முடியுமா என்று பாஜக அரசு கேட்கிறது!

யார் வரி செலுத்துகிறார்கள்? ஜிஎஸ்டி கணக்கீட்டின்படி, அதிக செல்வ வளம் படைத்த உயர்ந்த இடத்தில் இருக்கிற 10% பேர் செலுத்துவது மூன்று சதவீத வரி மட்டுமே. ஆனால் 50 சதவீத மக்கள் அதாவது 70 கோடி இந்தியர்கள் 64.5% வரி செலுத்துகிறார்கள். அப்படியானால் அரசாங்கத்தின் கையில் உள்ள வரி பணம் யாருடையது? மோடி அவர்களே எங்களிடம் பொய்யுரை கூறாதீர்கள்.

லஞ்சத்திலும் ஊழலிலும் நாடு சிக்கித் தவிக்கிறது. இந்த அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த சிஏஜி அறிக்கை இதை வெட்ட வெளிச்சமாக்கி இருக்கிறது. எதை மையப்படுத்தியாகிலும் ஒரு கலவரம் நடைபெற்றால், அதன் மூலம் வாக்குகளை பெற முடியும் என்றுதான் ஆர்எஸ்எஸ் – பிஜேபி திட்டமிடுகிறது.



‘உன் கையில் ஆட்சியில் இருக்க வேண்டும் என்றால் அதன் தொண்ணூறு சதவீத மக்கள் பட்டினி கிடக்க வேண்டும். அப்போதுதான் தேவையான நேரத்தில் அவர்களுக்கு பணத்தை தந்து நீ நினைத்தபடி அவர்களே ஆட வைக்க முடியும்: என்று இவர்களின் சித்தாந்த தந்தையான கோல்வாக்கர் போதித்து இருக்கிறார்.

இந்தியா வளம் பெறுகிறது என்றால், ஒவ்வொரு இந்தியனும் வளம் பெற வேண்டும். ஒரு முனையில் செல்வக் குவிப்பு, மறுமுனையில் கடும் பட்டினி என்றால் அது ஏற்கத்தக்கது அல்ல. செல்வத்தை உற்பத்தி செய்த மக்களுக்கு அதில் உரிய பங்கு வேண்டும்.

அதைத் தர மறுக்கிற மோடி போக வேண்டும் என்கிறோம். அதற்காகத்தான் இந்தியா கூட்டணி உருவாகி இருக்கிறது. அது வெற்றி பெற வேண்டும். அந்த இந்தியா கூட்டணியிடம் கூட, இந்த நாட்டுத் தொழிலாளர்களின், விவசாயிகளின் கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறோம். அதனைச் செய்வதாக வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாட்டுக்கு வந்த அமித்ஷா, உங்களது செங்கோலை நாங்கள் நாடாளுமன்றத்தில் வைத்திருக்கிறோம். எங்கள் கட்சிக்கு 25 எம்பிகளைத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார். ஒற்றை எம்பி கூட இல்லாமல் வெற்றுக் கையோடு அவர்களை நீங்கள் வெளியேற்ற வேண்டும்.

## நவம்பர் 26, 27, 28 தேதிகளில் ஆளுநர் மாளிகை முன்பு போராட்டம்

நமது கோரிக்கைகளை முன்வைத்து நவம்பர் 26, 27, 28 தேதிகளில், இந்தியா முழுமையும் உள்ள ஆளுநர் மாளிகைகள் முன்பு பெரும் திரள் அமர்வுப் போராட்டம் நடக்கிறது. அறிவற்ற சொற்களையே பேசி தெரியும் உங்களது ஆளுநரை பற்றி நான் விளக்க வேண்டியதில்லை. இந்த இயக்கத்தை வெற்றி பெறச் செய்யுங்கள்.

பழுக்க காய்ச்சிய இரும்பை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வடிவமைக்க வேண்டுமானால், சூடேறியபின் கனத்தசுத்தியலால் அடித்து வளைக்க வேண்டும். அனைத்து பகுதி மக்களும் கரம் கோர்ப்போம். பாஜகவை அடித்து விரட்டுவோம்“ என்று அமர்ஜித் கவுர் பேசினார். அவரது பேச்சை தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி தமிழில் மொழி பெயர்த்தார்.

பொதுக் கூட்டத்திற்கு திருப்பூர் மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் பி.ஆர். நடராஜன் தலைமை ஏற்றார். ஏஐடியுசி செயல் தலைவர் பினாய் விஸ்வம் எம்பி, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன், தேசிய செயலாளர் வகிதா நிஜாம், மாநில தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், மாநில பொதுச் செயலாளர் ம. ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பேசினார்கள். மாவட்டத் தலைவர் மோகன் நன்றியுரை ஆற்றினார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 30.09.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# பிஜேபியை விரட்டுவோம்! தேசத்தை பாதுகாப்போம்!

## அமர்ஜித் கவுர் முழக்கம்!

**ஏஐடியுசி தேசிய பொதுக்குழு கூட்டம் திருப்பூரில் செப்டம்பர் 21 முதல் 24 தேதி வரை நடைபெற்றது. நிறைவாக யுனிவர்சல் தியேட்டர் அருகில் தீர்மான விளக்கம் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுச் செயலாளர் அமர்ஜித் கௌர் சிறப்புரையாற்றினார்.**




அதன் சுருக்கம் பின் வருமாறு:

“பிரதமர் மோடியைநாம் விரும்புகிறோமா வெறுக்கிறோமா என்பது கேள்வியே அல்ல. அவரது கொள்கை, கருத்தியல் எப்படிப்பட்டது என்பதை வைத்துதான் ஆதரவும் எதிர்ப்பும் வரும்.

இந்தநாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் தலைக்கு மேல் ஒரு கூரை வேண்டும்; குழந்தைகள் உயிர் வாழ, படிக்க, வேலை பெற, வேலைக்கேற்ற ஊதியம் பெற, பணியிடத்தில் பாதுகாப்பு பெற, எல்லா காலத்திலும் சமூக பாதுகாப்பு கிடைக்க, முதுமையில் ஓய்வூதியம் பெற அரசாங்கம் உறுதியளிக்க வேண்டும்.

மோடியின் பாசிச அரசாங்கம், தொழிற்சங்கங்களைச் சிதைக்கிறது; விவசாயிகளை நிலைகுலைய வைக்கிறது. தனது மோசமான நடவடிக்கைகள் மக்களுக்கு தெரிய விடாமல் இருக்க ஊடகங்களின் கழுத்தை நெரிக்கிறது. எழுத்தாளர்கள், அறிவு ஜீவிகளை, சிறையில் தள்ளுகிறது. இது மோடி என்னும் தனிமனிதனின் விளையாட்டு அல்ல; நமது நாடு, நமது மக்களின் வாழ்க்கை.

தமிழ்நாட்டு மக்கள் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். சென்ற தேர்தலில் பிஜேபியையும் அதன் கூட்டணியையும் தூக்கி எறிந்தார்கள். தாங்கள் விரும்பும் மாநில அரசை தேர்வு செய்த பின்னும் கூட, அது ஒன்றிய அரசு திணித்த எட்டு மணி நேர வேலையை பன்னிரண்டு மணி நேரமாக உயர்த்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்ற போது, அதனை உறுதியாக எதிர்த்துப் போராடினார்கள்.

மாநில ஆளுங்கட்சியின் தொழிற்சங்கமும் சேர்ந்து வந்தது. தொழிற்சாலைகளில் பணிபுரிபவர் மட்டுமின்றி அனைத்து பகுதி தொழிலாளர்களும் ஒன்றிணைந்தனர். அரசியல் கட்சிகள் ஆதரவு தந்தன. மக்களின் கருத்து உருவாக்கப்பட்டது. அதனை உணர்ந்த மாநில அரசு அந்த சட்டத்தை திரும்ப பெற்றது. எனவே தனி மனித விருப்பு வெறுப்பு என்று எதுவும் இல்லை. கையாளுகிற கொள்கை ஏற்கத்தக்கதா அல்லது எதிர்க்கத் தக்கதா என்பதே கேள்வி.

சர்வதேச அளவில் மல்யுத்த போட்டிகளில் வென்று இந்திய நாட்டுக்கு பதக்கங்களை கொண்டு வந்து தந்த வீராங்கனைகள் போராடினார்கள். மல்யுத்த விளையாட்டு அமைப்பின் தலைவராக உள்ள பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் பிரிஜ் பூஷன் சரண் சிங் தம்மை பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்தியதாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள். போராடிய அந்தப் பெண்களுக்கு இந்தியாவின் தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள், அரசியல் கட்சிகள் அனைத்தும் ஆதரவு தந்தன.

ஆனால் பாஜக அரசு, அந்தக் கொடூரன் மீது எஃப்ஐஆர் தாக்கல் செய்வதற்கு கூட மறுத்துவிட்டது. கடைசியில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு உத்தரவிட்ட பின்பு எஃப் ஐ ஆர் போட்ட அரசு, அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்பட்ட போது அந்த பிரிஜ் பூஷன் சிங் சுதந்திரமாக நடமாடினார். ஆனால் பாதிக்கப்பட்ட பெண்களை நடுத்தெருவில் வைத்து, அடித்து இழுத்துச் சென்றது பாஜக அரசின் காவல்துறை. இப்போது பெண்களுக்கான இடஒடுக்கு ஒதுக்கீடு மசோதாவை தாக்கல் செய்த மோடி, பெண்களை மதிப்பதற்காகவே தன்னை கடவுள் அனுப்பியதாக வெட்கம் இன்றி பேசியிருக்கிறார்.

அவரது அரசாங்கம் வெளியேற வேண்டும் என்பதில் அரசியல் ரீதியாக தெளிவாக இருக்கிறோம். சாதாரண மக்கள், விவசாயி, தொழிலாளி, மாணவர், இளைஞர், பெண்கள் எல்லா குடிமக்களுக்கும் மோடி எதிரானவராக இருக்கிறார். அதானிக்கும் அம்பானிக்கும் மட்டுமே அவர் உதவி செய்கிறார். அவர்களும் பதிலுக்கு மோடியைப் போன்ற தலைவர் உலகத்திலேயே இல்லை என்று தாம் நடத்தும் ஊடகங்கள் மூலம் பரப்புரை செய்கிறார்கள்.

மோடி அகற்றப்படவில்லை என்றால், பல்வேறு பண்பாடுகளும், பழக்கங்கள், மரபுகள், மொழிகள், உடைகள் கொண்ட நமது நாட்டின் பன்மைத் தன்மை சிதைக்கப்பட்டு விடும்.

உலகில் 750 கோடி மக்கள் உள்ளனர். இதில் 140 கோடிக்கு மேற்பட்டவர்கள் இந்தியர்கள். உலகில் ஒவ்வொரு ஆறு பேர்களிலும் ஒருவர் இந்தியராக இருக்கிறார். இந்த மக்களை இரு கூறாகப் பிளந்து மோத வைத்து, அவர்கள் சொட்டும் ரத்தத்தின் மூலம் அதிகார நாற்காலியில் அமர வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் – பாஜக நினைக்கிறது. நமது நாட்டைக் காப்பாற்ற இந்த பாசிசத்தன்மையை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும்.

நமது நாட்டின் செல்வ வளங்கள் அழிந்து போய்விட்டனவா? அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய கல்வி கற்றுத் தர முடியாதா? எல்லோருக்கும் மருத்துவமும், வேலையும், உணவும், வீடும் கொடுப்பதற்கு முடியாதா? இந்திய இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்ற இயலாதா? இந்தியாவில் பணமே இல்லை என்பது முழுவதும் பொய்யல்லவா! நமது நாட்டு மக்கள் உழைக்கிறார்கள்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்




வெளிவந்துவிட்டது!


Dr. G.R. ரவீந்திரநாத் எழுதிய
சனாதன தர்மமும் சமூக நீதியும்
விலை: ரூ.25
NCBH அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
வாங்கிப் படியுங்கள்!

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.